பக்கங்கள்: எட்டு
விலை ரூபா 5-00
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 08 சனிக்கிழமை 21-04-2001 தொலைபேசி: 3378 ஒலி: 122

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி.
176/1, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.
(கி/1768)

## முல்லைத்தீவுக் கடற்பரப்பில் கடற்புலி - கடற்படை மோதல்

### டோறா சேதம்; 4படையினர் காயம்

கடற்புலிகளுக்கும், இலங்கைக் கடற்படையினருக்கும் இடையில் நேற்று அதிகாலை 4.00 மணியளவில் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் பெரும் மோதல் வெடித்தது. இம்மோதலின் போது கடற்படையினரின் டோறா படகு ஒன்று சேதத்திற்குள்ளானதாகவும், 4 படையினர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதிகாலை 4மணியளவில் ஆரம்பமான இம்மோதல் காலை 7மணி வரைநீடித்தது: இதன்போது விடுதலைப்புலிகளின் மூன்று படகு 8ம் பக்கம் பார்க்க)

## எரிக்சோல்ஹெய்ம் 25ல்கொழும்பு வருவார்

(கொழும்பு)

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான முயற்சியில் ஈடுபட்டுள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் அடுத்த வாரம் 25ம் திகதி புதன்கிழமை கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகாவை சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின் போது நோர்வேயில் விடுதலைப் புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்துடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு எரிக்சோல்ஹெய்ம் எடுத்துக்கூறுவார்;

→ 8ஆம் பக்கம் பார்க்க

## ★ உள்விவகாரத்தில் எவரும் தலையிட முடியாது

# புலிகளுக்கு எதிரான தாக்குதலை அரசு மீண்டும் ஆரம்பித்துள்ளது!

### பிரதமர் ரட்ணசிறி அறிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான மோதல் தவிர்ப்புக்காலம் முடிவடைந்ததை அடுத்து விடுதலைப் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை அரசு ஆரம்பித்துள்ளது.**

**இந்நிலையில் விடுதலைப் புலிகள் எந்த விதமான முன் நிபந்தனையுமின்றி சமாதானப் பேச்சு வார்த்தைக்கு வரவேண்டும்**

**எமது நாட்டின் உள்விவகாரத்தில் எவரும் தலையிடுவதற்கு நாம் அனுமதிக்கப்போவதில்லை.**

இவ்வாறு பிரதமர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கா பாணந்துறையில் நேற்று தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் போது காயமடைந்த படை வீரருக்கு முச்சக்கர வண்டி வழங்கும் வைபவத்தில் பேசும் போதே பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா மேற்கண்டவாறு கூறியுள்ளார்;

இவ் வைபவத்தில் பிரதமர் மேலும் பேசுகையில்;

அரசாங்கம் கடந்த கால

→ 8ஆம் பக்கம் பார்க்க

## சமாதானப் பேரவையின் இன்றைய சந்திப்புகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களது தேவைகள், சமாதானம் குறித்து நேரில் அறிந்துகொள்வதற்காக தென்னிலங்கையில் இருந்து வந்த தேசிய சமாதானப் பேரவையினர் நான்கவது

→ 8 ஆம் பக்கம் பார்க்க

## மட்டக்களப்பில் ஷெல் தாக்குதல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகருக்கு அப்பாலுள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப் பாட்டுப் பிரதேசமான வாவிப் பகுதியை நோக்கி 233 படைப் பிரிவினரால் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளபட்டது

நேற்று இரவு இடம் பெற்ற இச் ஷெல் தாக்குதலினால் அரைமணித்தியாலயம் வரை

(8ம் பக்கம்பார்க்க)

## இரத்மலானையில் விமானவிபத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா விமானப்படைக்குச் சொந்தமான செஸ்னா வகை இலக்கு விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் விபத்துக்குள்ளானது;

இவ் விமானம் தனது ஒளிப்பட வேவுப்பணியை முடித்துக் கொண்டு விமான நிலையத்தில் கரை இறங்கும் போது அதன் சில்லுகளில் ஒன்று இயங்காமையாலேயே விமானம் விபத்துக்குள்ளானதாக விமான நிலைய வட்டாரங்கள் தகவல் தெரிவித்துள்ளன;

(ந)

## இரத்தம் சிந்திப் போராடும் புலிகளை தமிழர்கள் தம் பிரதிநிதிகளாக ஏற்றுள்ளனர்!

### இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக இரத்தம்சிந்திப்போராடிக்கொண்டிருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ்மக்கள்தங்கள்பிரதிநிதி மக்களாகஏற்றுக்கொண்டுள்ளார்கள் இதனாலேயேதமிழ்கள் விடுதலைப்புலிகளைஆதரிக்கின்றார்கள்; தேசிய சமாதானப் பேரவை உறுப்பினர்களை சந்தித்தஇந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் இவ்வாறு தெரிவித்துள்ளார்கள்;

இந்து அமைப்புக்களின்சார்பில் பேராசிரியர்எஸ்.சிற்றம்பலம், பேராசிரியர்குமாரவடிவேல், பேராசிரியர்கோபாலகிஷ்ணஐயர், இந்துசமயப்பேரவைத்தலைவர் சி.வினாசித்தம்பி உட்பட இந்து மதகுருமார்களும் கலந்து கொண்டனர்இச்சந்திப்பு நல்லை ஆதீனத்தில்நடைபெற்றது;

இந்தச்சந்திப்பில் இந்துசமய அமைப்புக்கள்சமாதானப்பேரவையிடம் மேலும் தெரிவிக்கையில்அரசியலைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகளுக்கும்எமக்கும் முரண்பாடுகள் எதுவும்இல்லை அவர்கள் தமிழ்மக்களின் உரிமைக்காகவே போராடுகின்றார்கள்; இதனாலேயே அவர்கள் தமிழ்மக்களால் ஆதரிக்கப் படுகின்றார்கள். என்று தெரிவித்துள்ளார்கள்.

இதற்கு முன்னதாக தேசிய சமாதானப்பேரவை பின்உறுப்பினர்கள் நல்லூர் கந்தசாமி ஆலயம் சென்று வழிபாடு நடாத்தினர். (வ)

## உள்ளே...

அபிவிருத்தித் தொண்டர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சை குஅழைக்கப்பட்டோரின் பெயர்ப் பட்டியல்.

## ஐ. தே. கட்சியின் ஆணைக்குழுச்சட்ட மூலத்தால் பாராளுமன்ற கூட்டம் ஒத்திவைக்கப்படலாம்?

### அரசியல் வட்டாரங்கள் ஆரூடம்

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியினால் சுதந்திரமான ஆணைக்குழுக்கள் அமைப்பதற்கான சட்டமூலத்தைப் பாராளுமன்றில் சமர்ப்பிப்பதைதடுக்கும்விதத்தில் அவசரகாலச்சட்டம் நிறைவேற்றப்பட்டதும், பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஒருமாதத்திற்கு ஒத்திவைக்கலாமென்று அரச வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது ஒஸ்லோவில் தங்கியுள்ள எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்கா சமாதான முயற்சிகளுக்குத் தாம் வழங்கும் ஆதரவுகுப் பதிலாக நான்கு ஆணைக்குழுக்களுக்கும் அரசு ஆதரவு வழங்க வேண்டுமென்று நோர்வே அதிகாரிகள் மத்தியில் தெரிவித்துள்ளார்;

இதேவேளை ஆணைக்குழுக்களுக்கான வரைபுகள் இறுதி வடிவம் பெற்றுவிட்டன. மே

→ 8ஆம் பக்கம் பார்க்க

## நட்டஈடுவழங்க அரசுமறுப்பு

[யாழ்ப்பாணம்]

வலிகாமம் வடக்குப் பகுதியில் இராணுவக் கட்டுப் பாட்டில் உள்ள உயர்பாதுகாப்புவலையத்துக்குள் அடங்கும் காணிச் சொந்தக்காரர்களுக்கு எந்தவிதமான

(8 ஆம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### போட்டோ பிரதிகள்

பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள் மற்றும் நிறுவனங்கள் அதிக தொகையில் ''போட்டோ பிரதி'' செய்து கொள்ள விசேஷ கழிவுடன் D SCOUNT) இனாமாக FREE OF CHARGE) பிளாஸ்டிக் பைண்டிங் செய்து கொடுக்கப்படும் தொடர்பு கொள்ளவும் G S B தொலைத் தொடர்பு நிலையம் (பாப்பையா கடைச் சந்தி) நாவலர் வீதி. யாழ்ப்பாணம்.

(கி 1861)

### ENGLISH CLASSES

G C E O/L English (Old-syllabus) வகுப்புகளும் G.C E A/L general E glish, Englih வகுப்புகளும் சனிக்கிழமை (21-4 2001) பி. ப 2 00 மணிக்கு ஆரம்பமாகின்றன. அனுமதிக்கு பெற்றோர் வருகை அவசியம் தொடர்பு கோ சுப்பிரமணியம் இல: பழம்றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(2935)


## அஞ்சலிக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் எழுத்தாளர் ஒன்றியம், யா. இலக்கிய வட்டம், கலை இலக்கியப் பேரவை ஆகியவை இணைந்து நடத்தும் மூத்த படைப்பாளி அமரர் வ.அ இராசரத்தினத்தின் அஞ்சலிக் கூட்டம் நாளை மு.ப 10மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் கலை இலக்கியப் பேரவையின் தலைவர் க தணிகாசலம் தலைமையில் இடம் பெறவுள்ளது.

(உ)

## பாலம்

(வலம்புரி பல்சுவை இலக்கியமையம்)

### இலக்கிய கர்த்தாக்களே ஒரு நிமிடம் . . .

உங்கள் ஆக்கங்கள் வந்து குவிந்த வண்ணமே உள்ளன
அத்தனையும்
பாலம்
வலம்புரி பல்சுவை
மையத்தில்
வலம் வரவுள்ளன...
இந்த வேளையில்
உங்களுடன் சில
வார்த்தைகள்,
நல்ல தொரு களமின்றி
தேங்கிவிட்ட
உங்கள் எண்ணங்கள்
உணர்வலைகள்
தவிப்புகள் மிகப் பெரிது.
நாளடைவில் உங்கள்
பெரு இலக்கிய
முயற்சிகளுக்கும்
வலம்புரி களம் சமைக்கும்
ஆனால் இப்பொழுது.
உங்கள் எண்ணங்களை
வடிகட்டி வரையறுத்து.
சுருக்கமாக இறுக்கமாக
எழுதி அனுப்புங்கள்...
கதை கட்டுரைகள்
போன்றவற்றை
150 சொற்களுக்கு
மேற்படாத வகையிலும்,
கவிதைகள்
30 சொற்களுக்குள்
உள்ளடங்கியதாகவும்
மற்றும்
நகைச்சுவை துணுக்குகள்
படித்து சுவைத்தவை
விமர்சனங்கள்
கருத்தாக்கங்கள்
பல்சுவை தொகுப்புகள்
அனைத்தும்
எதிர்பார்க்கப்படுகின்றன.

[ஆ-ர்]

# வடக்கு - புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால்
# அபிவிருத்தி தொண்டர்களை தெரிவு செய்ய
# நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதி - புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சினால் அபிவிருத்தித் தொண்டர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை அந்தந்தப் பிரதேசசெயலர் பிரிவு ரீதியாக நடைபெறவுள்ளது.

இதன்பிரகாரமாக மானிப்பாய், கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுகளில் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 10 30 மணிக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும். நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பிறப்புச் சான்றிதழ், நற்சான்றிதழ் போன்றவற்றுடன் தத்தம் பிரதேச செயலர் பிரிவுகளில் தோற்றுமாறு ஈ.பி டி பியின் யாழ் மாவட்ட பிரதி அமைப்பாளர் க. மணிபல்லவராஜன் (நிஷாந்தன்) கேட்டுள்ளார்.

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர் பெயர் விபரம் வருமாறு.

### கரவெட்டி பிரதேச செயலகம்

வேலும மயிலும் மணிவண்ணன், தியாகராசா பராசக்தி, ஆறுமுகம் யிதன், சிறீஸ்கந்தராசா வசந்தமால, மூர்த்தி சைலசா, மூர்த்தி பிரபா, கிருஸ்னகோபால் பிரமிளா சுதர்சினி, சின்னத்துரை சிவாசினி, சின்னத்துரை சந்திரபாலன், செல்வம் சியானி, இராசேந்திரம் விஜயா, சின்னத்தம்பி செந்தில்வேல், இராசன் சிவகுமார் ஆறுமுகம் ரசிதா, குருநாதன் குமுதினி,

தவராசா தயானி, ஆசைப்பிள்ளை சுசிலா, ரட்ணசிங்கம் முகுந்தபாலா, பூபால்ரஜிதா, கனகசபாபதி ஜெயகாந்தன், நல்லைநாதன் தனரஞ்சன், கதிரவேலு அஜிந்தினி, சிங்கராசா ஸ்ரீதரன், சண்முகநாதன் சதீஸ், விநாயகமூர்த்தி தேவமலர், ஆனந்தவேல்சுபாஜினி, ஜெயராசா மணிவண்ணன், தம்பிராசா தர்மராசா.

சி.யாதவகுமார், செல்வேந்திரம் அபிராமி, தங்கராசா நிமல்ராஜ், யோகராசா சதீஸ்கரன், சபாரத்தினம் குகநாதன் பரமானந்தராசா திவாகரன், தம்பிராசா நியூட்டன், நாகேஸ்வரன் ஐங்கரன், ஆனந்தராசா ஆனந்தகுமார், சதாசிவம் சதீஸ்குமார்.

சிவஞானம் வனிதா, தங்கவடிவேல் சித்திர ஜெயா, செல்வச்சந்திரன் வாகேஸ்வரி, குமாரு உமாவதி, சிவகுருநாதன் பவானி.

சிவபுண்ணியம கமல், நல்லையா கவிதா, சிவலிங்கம் காஞ்சனா, வேலுப்பிள்ளை சுபாகரன், திருப்பதிதிருலோகநாதன், வெங்கடாசலம் வினோதன், ஜெகதீஸ்வரன் சுபாஜினி, பஞ்சாச்சரசிவம் நாகசோதி, புஸ்பராசா ஜெயமல்லிகா, வசந்ததேவன் ஜெகதீஸ்வரன்.

புஸ்பராசா இந்திரகாந், அன்றூ சுதர்சன், சின்னத்தம்பி சிவபாலன், பற்குணம் தெய்வகுலம், தம்பிராசா பிறேமாவதி, சுந்தரம் கருணாகரன்.

இரத்தினம் புஸ்பமாலினி- நாதன் நாகரத்தினம் - சிவானந்தஐயர் செல்வமாலா- தியாகராசா ஜெயரஞ்சினி- தேவரத்தின சிங்கம் செந்தீபன் - தெய்வேந்திரம் யசோ - சூசைப்பிள்ளை மேரி கொன்சலின் - செல்வராசா சுமங்கலி.

சூசைப்பிள்ளை மேரி யூட் சலின் - அமிர்தலிங்கம் மந்தாகினி - கிட்டிணன் விஜயராணி - சோமசுந்தரம் ரதீஸ்வரி - யேசுதாசன் மேரி ஷாலினி - தவபுத்திரன் தவநேசன் - நிர்மலானந்தராஜா நிசாந்தன்-சிவகுரு சிவதாஸ்- பிரசாத் ஜெயபாரதி - சிவஞானம் சுகந்தி - நடராஜா தமயத்தி - இராமலிங்கம் ஜெயசுதா.

தருமன் அமுதா - அப்புக்குட்டி அனுராதா - தெய்வேந்திரம் சர்மிளா - ஐயாத்துரை ஜீவரேகா-சிவஞானம் சுமதி - செல்லத்துரை ஜெயலதா-சின்னத்துரை ஸ்ரீவதனி

வல்லிபுரம் லதாராணி- கந்தசாமி யசோதா - கிட்டிணன் யோகேஸ்வரி - சிவஞான ஜெபம் பூமகள்- சின்னமணி சிறீஜெகன் - செல்லத்துரை முரளீதரன் - இளங்கோவன் தேசிகன்.

சின்னராசா பிரசாத் - மணிகலாதன் பிரகலாதன்- சத்தியலிங்கம் சுமதி - மணிகலாதன் பிரதாபன் - தர்மலிங்கம் தயாகரன் - கற்பநாயகம் றதீகா - மகாலிங்கம் றபா - குணசேகரம் சுகிதா இராஜரத்தினம் ராதிகா.

குணசிங்கம் சசிரேகா - பரஞ்சோதி யசோதா - சிங்கராஜா ஜெகன் - இராசரத்தினம் குணராஜா-சிவநேசன் சந்திரபிரபா - சிவராசா சுசிதரன் - இராகவன் கிரிஷாம்பாளி - இந்திரன் விஜிதா - சின்னத்துரை லிங்கேஸ்வரலிங்கம்.

கிருஷ்ணமூர்த்தி, உதயணன் ஆனந்தராசா அகிலராஜ் - தம்பையா கெங்காதரன் - சிவலிங்கம் பிரபாகரன்-தங்கவேல் ஜெகதீசன் கிருஷ்ணமூர்த்தி உதயராஜ் - தேவதாஸ் பிறேமதாஸ் - சுந்தரலிங்கம் தயாபரன் - சிவலிங்கம் - சுவேந்திரராசா - தனராசா கிருஸ்ணரூபன்.

நல்லாயன் புஸ்பராணி- இராஜேஸ்வரன் மதனா- தருமன் மாலினி- தெய்வேந்திரம் பிரதீபன்- சிவபாதம் பரணீதரன்- சிவம் சிவகுமரன்- சிவலிங்கம் சிவனேஸ்வரன்,

பாலசிங்கம் சுதா- கணேசராசா சுகந்தினி- தம்பிராசா லிங்கேசன்- சண்முகநாதன் சுகந்தினி- நவரட்ணம் சசிகுமார்- இரத்தினம்வஜீகரன்- சின்னத்துரை சிவகுமார்- தர்மலிங்கம் தயானந்தன்,

ஆனந்தராசா கமல்ராஜ்- மகாலிங்கம் ஜெயபாஸ்கரன் வேலாயுதம் ஜேசுதா- சதாசிவம் புனிதவதி-விஜேந்திரன் கீதாங்கினி- சௌபாக்கியம் மனோகரி- மகாலிங்கம் ஜெயப்பிரதா- செல்வரத்தினம் சிறீறஞ்சினி,

குலம் நாகராணி - சந்திர சூரியர் விஜிதா- சேகர் சுபாசினி- தாமோதரம்பிள்ளை பவளகாந்தன்- கதிர்காமத்தம்பி சிற்றம்பலம்- சித்தன் மனோகரி,

### மானிப்பாய் பிரதேச செயலகம்

வரதராஜா ரஜனி- துரைசிங்கம் றொமினா-பாஸ்கரன் ரதிதேவி- கிருஷ்ணன் ஜெயராணி- பூபாலசிங்கம் ரசிதா- தேவராசா விஜிதா- சிவசுப்பிரமணியம் சுகிதா- குலேந்திரன் கவிதா- பழனிவேல் சசிகலா- நடராசா ஜெயகௌரி- பாலச்சந்திரன் சோபனா- கதிரமலை யசோதா- சின்னையா கோமளா- முருகையா தனுஷா-தவராசா தயாளினி ஜெகதீசன்ராஜ்கலா- ஆனந்தராசா ஜெனிதா- கந்தசாமி வதனா- நடராசா சரீனா- தவராசா தட்சாயினி- இராசதுரை சசிக்குமார்- சின்னத்துரை அண்ணாமலை- செல்வம் சுமன்- தம்பிராசா குகரூபன்- சண்முகலிங்கம் ஜெகநாதன்- பழனி அருந்தவக்குமார்- அரியதுரை காந்தரூபன்- முருகன் சிவானந்தன்- அப்பையா சேனாதிராசா- நவநீதன் நீதராஜ்- சீனிவாசகம் யாதவன்- இரத்தினசிங்கம் ராஜ்குமார்- இரத்தினம் சுகுணதாஸ்- தர்மலிங்கம் தர்மராஜ்- சிவராசா அகிலன்- இரவிச்சந்திரன் பிறேம்நாத்- கதிரமலை மணிவண்ணன்- பத்மநாதன் இராகுலன்- கந்தசாமிகண்ணதாஸ்- தேவராசா மதிசுதன்- செல்லத்துரை துஷ்யந்தன்- பராஜசிங்கம் பிரபாகரன்- கதிரவேல் செல்வக்குமார்- திருச்செல்வம் கிருபாகரன்- சின்னத்துரை சத்தியநாதன்- முத்துக்குமாரு யசோதா- செலவராசா உஷாந்தினி- திருச்செல்வம் கிருபாஜினி- சின்னராசா கிருஷ்ணமதி- கமலி துர்க்கா பஞ்சலிங்கம்- ஆறுமுகம் கனகாம்பிகை- செல்ராசா தபோதினி- சூரியகுமார்சுவோதினி-சிங்கராசா சுபாஜினி- சிவலிங்கம் ரஜனி- கனகரட்ணம் றஜிதா-செபஸ்ரியம்பிள்ளை சுதர்சினி- அருமைத்துரை கௌசிலி- ஆறுமுகம் கௌரி- சண்முகநாதன் அனுலா- செல்லத்துரை கனிமொழி- அந்தோனிப்பிள்ளை அனிஸ்ரீபன்- முருகேசப்பிள்ளை சதீஸ்வரன்- இந்திரசேகரம் தர்சினி- அந்தோனிப்பிள்ளை அலெக்ஸ்ரீபன்,

★ ஏனைய பிரதேச செயலர் பிரிவுகளில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரம் நாளை வெளிவரும். [ந]

## மென் பந்தாட்டம்

(சுழிபுரம்)

சுழிபுரம் பறாளை நாவலர் சனசமுக நிலையக் கட்டடத் திறப்பு விழாவை முன்னிட்டு மென்பந்தாட்டப் போட்டி இன்று காலை 8 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. [உ-ப-10]

## தெரிவுப் பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தில் புதிய மத்தியஸ்தர்களை இணைக்கும் நோக்குடன் வருடாந்தம் நடத்தப்படும் தெரிவுப்பரீட்சை நாளை ஞாயிற்றுகிழமை மு.ப 10.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்த அனைவரையும் குறிப்பிட்ட நேரத்திற்கு சமுகம் தருமாறு கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கத்தின் செயலாளர் எஸ்.சிறீகாந்தன் கேட்டுள்ளார். [உ]

## பயண அனுமதி---

| | |
|---|---|
| 186251 பி | 188856 ஏ |
| 188856 பி | 188970 ஏ |
| 188994 ஏ | 188994 பி |
| 189081 ஏ | 189081 பி |
| 189081 சி | 189081 டி |
| 189104 ஏ | 189104 டி |
| 189104 சி | 189104 பி |
| 189104 ஏ | 189104 டி |
| 189104 சி | 189104 பி |
| 189101 ஈ | 189 04 எப் |
| 189104 ஜி | 189104எச் |
| 189126 ஏ | 189146 ஏ |
| 189173 ஏ | 189196 ஏ |
| 189203 ஏ | 189210 ஏ |
| 189211 ஏ | 18922 ஏ |
| 189236 பி | 189238 ஏ |
| 186238 பி | 189238 சி |
| 189238 டி | 189258 ஏ |
| 189285 ஏ | 190752 ஏ |
| 190759 ஏ | 190868 ஏ |
| 190876 ஏ | |

## பரீட்சை முடிவுகள்

யாழ்.பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பீட நுண்கலை மாணி இசை, நடனத் துறைகளுக்கு கடந்த வருடம் நடைபெற்ற இறுதிப் பரீட்சை முடிவுகளும் டிப்ளோமா இசைக்கலைமாணி, நாட்டியக் கலைமாணி இறுதி முடிவுகளும் கடந்தவாரம் வெளியாகி உள்ளன. [உ-2]


யாழ் நகரில் கைக் கடிகாரங்களின் சங்கமம்

ஞானம்

அழகு மாடம்

87, கஸ்தூரியார் வீதி,

அழகு சாதனங்கள்
அன்பளிப்புப்பொருட்கள்
பாக் வகைகள்
தையல் சாதனங்கள்
கொலோன் வகைகள்
என்பவற்றையும் தரமாக நியாய விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

(கி/1865)

LOGIC

V ரகுமார்

A/L 2002, 2003
சனி - ஞாயிறு
2. 30-4 P.M

புதிதாக சேரும் மாணவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து
விசேட வகுப்புக்கள்
ஆரம்பம்: ஏப்21, சனி 3Pm

BRIGHTMAN
BROWN ROAD
JAFFNA

[கி-1864]

தரம் 5 O|L A|L
உட்பட அனைத்து வகுப்புக்களும்

1/4 நூற்றாண்டைக் கடந்த இணையற்ற சேவையில் நடைபெறுகின்றன.

(கி-1866)

# செய்தித் துளிகள்

## உடற்பயிற்சிப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலய உடற்பயிற்சிப் போட்டிஇன்று பி.ப 2 மணிக்கு யா- கனகரட்ணம் மத்தியமகாவித்தியாலயத்தில் கல்வி நிர்வாக பிரதிக்கல்விப் பணிப்பாளர் நா. வரதராஜா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு- கிழக்கு மாகாணகல்விப்பணிப்பாளர் இ. சிவானந்தன் கலந்து கொள்ளவுள்ளார். (உ-10)

## வெட்டுப் புள்ளி விரைவில் வெளியாகும்

(கொழும்பு)

பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளி எதிர் வரும் மே மாதம் வெளியிடப்படும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற க.பொ.த. [உ/த] பரீட்சைக்குத் தோற்றி; ஆகக் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களே பல்கலைக் கழகத்திற்குஅனுமதிக்கப்படுவார்கள் என்றும் பல்கலைக் கழக மானியஆணைக்குழு தெரிவித்துள்ளது.

(உ-10)

## பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு

[கோப்பாய்]

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வரும் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தின் தலைவரான அ. நல்லதம்பி 'சமூகதீபம்' என்னும்பட்டம்வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

வசாவிளான் மகாவித்தியாலய ஆரம்பப்பிரிவு பரிசளிப்பு விழாவிலேயே வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் வீ. இராசையா இவருக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்.

வித்தியாலய அதிபர் ஆ. சி. நடராசா தலைமையில் மேற்படி வைபவம் இடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (க-79)

## திருக்குறள் மனனப் போட்டி

(யாழ்ப்பாணம்)

உடுவில் கோட்டப் பாடசாலைகளில் தரம் 4, தரம் 5 மாணவர்களுக்கு பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற திருக்குறள் மனனப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கான, கோட்ட மட்ட திருக்குறள் மனனப் போட்டி எதிர் வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக உடுவில் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன் அறிவித்துள்ளார். [உ-2]

## சைக்கிள் திருட்டு

(இணுவில்)

துவிச்சக்கர வண்டிகள் இனந் தெரியாதோரால் அபகரிக்கப்படும் சம்பவங்கள் இணுவில் மற்றும் உடுவில் பகுதிகளில் அதிகரித்து வருவதாகப்புகார் தெரிவிக்கப்படுகிறது.

இரவு 7.00 மணிக்குப் பின்னர் வீதிகளில் செல்லும் வயோதிபர்கள் மற்றும் சிறுவர்களின் துவிச்சக்கர வண்டிகளே இவ்வாறு அபகரிக்கப்படுவதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-47)

## படையினர் இருவர்காயம்

[யாழ்ப்பாணம்]

கடந்த புதன் காலை நாகர்கோயில் பாதுகாப்பு எல்லைக்கோட்டுப் பகுதியில் பாதுகாப்பு நட வடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் அப்பகுதியில் புலிகளின் நடமாட்டத்தை இனங்கண்டு தாக்கியுள்ளனர்.

அதேவேளை மேற்கொள்ளபட்ட இத்தாக்குதலின்பின்னர் அப்பகுதியில் இடம் பெற்ற தேடுதல் நடவடிக்கையின் போது படையினர் இருவர் மிதிவெடியில் அகப்பட்டு காயமடைந்துள்ளதாக விசேட ஊடக தகவல்நிலையம் தெரிவித்துள்ளது. [ந-4]

## ஆசிரியர் சங்கத்துடன் சந்திப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ். வந்த சமாதானப் பேரவையினர் நேற்றுமுன் தினம் தமிழ் ஆசிரியர் சங்கத்தைசந்தித்து,

ஆசிரியர்கள், மாணவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும், பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்கள், பாட நூல் போதாமை சீருடைத் துணிக்கு நிலவும் தட்டுப்பாடு மலசலகூட வசதியின்மை பற்றிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடினர்.

(உ-7)

## பாதீனியச் செடி பரவுகிறது

(அச்சுவேலி)

வல்லை வெளிப் பகுதியில் உள்ள கட்டாந்தரைகளிலும் வீதிமருங்குகளிலும் பாதீனியங்களை சுயாதீனமாக பெருமளவில் பரவிவருவதனை ஆங்காங்கே காணக்கூடியதாகவுள்ளது.

இதனை அழிப்பதற்கு இது வரை எவரும் முன்வராததனால் இவை அருகிலுள்ள வயல் நிலங்களிலும் பரவக் கூடிய அபாய நிலை ஏற்பட்டுள்ளது. [க-14]

## வீதி திருத்தப்படுமா?

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பாங்ஷால் வீதி நீண்ட நாட்களாக பெரும் சேதமடைந்து காணப்படுகிறது.

குறிப்பாகக் குருநகர் சந்தையை அண்டிய பகுதிகள் குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இதனால், இவ்வீதியூடாகப் பயணிப்போர். விபத்துக்களுக்கும் அசௌகரியங்களுக்கும் உள்ளாகி வருகின்றனர்.

(உ-59)

## பணிகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக செயற்பாடின்றி இருந்து வந்த நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்தின் பணிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

புதிய நிர்வாக சபையின் முயற்சியின் பேரில் நிலையத்தின் பணிகள் சிறப்பாய் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (உ)

## குழுமோதல்

(ஏழாலை)

ஏழாலை பழைய பொலிஸ் நிலையத்திற்கு அண்மித்த பகுதியில்கடந்தபுதன்கிழமை நண்பகல் வேளை இரு இளைஞர் குழுக்களிடையே கடுமையான மோதல்கள் இடம்பெற்றதாக தெரிய வந்துள்ளது.

[உ-12]

# அடிப்படை வசதிகள் இன்றி கைதடி மக்கள் பெரும் அவதி

## அ. விநாயகமூர்த்தி எம். பி. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கைதடிப்பகுதியில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கான அடிப்படை வசதிகள் போதியளவு வழங்கப்படாத நிலையில் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருகிறார்கள்.

தென்மராட்சிப் பகுதியில் கைதடி மற்றும் சாவகச்சேரிப் பகுதிக்குச் சென்று அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானித்தபின்னர் நேற்று ஊடகவியலாளர்களுடன் நடத்திய விசேட சந்திப்பின் போது அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவரும் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சாவகச்சேரிப் பகுதி யுத்தத்தினால் மிகவும் சேதமடைந்துள்ளது.

பிரதான வீதியின் இரு மருங்கிலுமுள்ள வீடுகள் பலத்த சேதமடைந்துள்ளன.

தொடரும் யுத்தத்தை நிறுத்தி வடக்கு-கிழக்கு இணைந்த சுயாட்சி முறையிலான திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வு கிடைக்க முயற்சிக்கவேண்டும்.

பாதுகாப்பு வலையமாக கூறிக்கொண்டு பலாலி, காங்கேசன்துறை ஆகிய பிரதேசங்களில் மக்கள் மீளக்குடியமர முடியாதநிலை யுள்ளது எனவும் பாடசாலைகள் பல இராணுவ முகாம்களாக அமைக்கப்பட்டு மாணவர்களின் கல்வி பாதிப்படைகின்றன. யூனியன் கல்லூரி, ஹாட்லிக்கல்லூரி, வேலணை சேர் வைத்திலிங்கம் துரைசுவாமி மகாவித்தியாலயம் ஆகியவையேஇராணுவ முகாமாக மாற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (க-06)

## இராசி பலன்

21-4-2001

(சித்திரை 8, சனி)

திரயோதசி மு.இ 8.40 வரை உத்தரட்டாதி பி.இ 2.12 -வரை

இராகுகாலம் 9.01- 10.31

நல்ல நேரம் 3.01- 4.31

சனிப்பிரதோச விரதம்.

**மேடம்**
சயன சுகக் குறைவு, காரிய அலைச்சல், சுப செலவு, கோபப்படுதல்.

**இடபம்**
கீர்த்தி, தனலாபம், தெய்வ தரிசனம், நண்பர்கள் சந்திப்பு, காரிய நன்மை.

**மிதுனம்**
தொழில் சிறப்பு, முயற்சி வெற்றி, நல்ல செய்தி, சுப நிகழ்ச்சி.

**கடகம்**
கட்டுப்பாடு, அச்சமான நிலை, வயிற்றுக் கோளாறு, பெரியோர் ஆதரவு.

**சிங்கம்**
வீண் பிரச்சினை, முயற்சி தடங்கல், நிம்மதிக் குறைவு, வியாதி.

**கன்னி**
காரியம் கைகூடும், உல்லாசம், விருந்துபசாரம், வாகன வசதி.

**துலாம்**
சத்துரு ஜெயம், வியாதி குணமடையும், புதியமுயற்சி, காரிய நன்மை.

**விருச்சிகம்**
வியாபார மேன்மை, அதிகாரிகள் ஆதரவு, தாழ்வு நிலை, முயற்சி தாமதம்.

**தனுசு**
தன்னம்பிக்கைக் குறைவு, பயந்த சுபாவம், அற்பர் நேசம், காரிய தாமதம்.

**மகரம்**
அந்நியர் சந்திப்பு, இனிய சம்பவம், வாக்கு மேன்மை, காரிய நன்மை.

**கும்பம்**
விவாதம், தனவிரயம், கௌரவக் குறைவு, முயற்சி கைகூடும்.

**மீனம்**
கற்பனை மிகுதி, ஜனவசியம், புதியபொருள்சேர்க்கை, நல்ல உணவு கிடைத்தல்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## தரம் 5 மாணவர்க்கு கணனிப் பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஆதரவுடன் சுன்னாகம் திருஞானசம்பந்த வித்தியாலயத்தின் தரம் 5 மாணவர்களுக்குஆரம்பக்கணனிப் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

கடந்த 18 ஆம திகதி ஆரம்பமான இப்பயிற்சி வகுப்பு நாளை வரை நடைபெறவுள்ளதாகவும் உடுவில் கோட்டத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகளில் முதற் தடவையாக இப் பாடசாலையிலேயேமேற்படி பயிற்சிவகுப்பு நடைபெற்று வருவதாக அப் பாடசாலையின் அதிபர் போ கணேஸ்வரலிங்கம் தெரிவித்தார். [உ-2]

## கால் நடை வளர்ப்போர்க்கு கடும் எச்சரிக்கை

(சுழிபுரம்)

சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச சபைக் குட்பட்ட ஜே/148, ஜே/149, ஜே/172, ஜே/173, ஜே/174, ஜே/175, ஜே/176, ஜே/177 கிராமஅலுவலர் பிரிவுகளில் வசிப்பவர்கள் வீட்டுக் கால் நடைகள், அல்லது பட்டிக் கால் நடைகளை மேட்டுக்காணிகளிலோ கட்டி மேய்ப்பதற்கோ, கட்டாக்காலியாக மேய்ப்பதற்கோ தடை செய்யப்பட்டுள்ளது.

இதனை மீறுவோரின் கால் நடைகள் பிடிக்கப்பட்டு குற்றம் அறவிடப்படும் எனவும் தொடர்ந்து மூன்று நாட்கள் வரை உரியவரால் மீட்கப்படாத கால் நடைகள் ஏலத்தில் விடப்படும் எனவும் கால் நடை வளர்ப்போர்க்கு கமக்காரர் சம்மேளனம் அறிவித்தல் விடுத்துள்ளது.

(உ-ப-10)

## உளவு பார்ப்பதற்காக வன்னிக்குச் செல்லவில்லை

## மேரி கத்தரின் கொல்வின்

[கொழும்பு]

விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியான வன்னிக்கு நான் சென்றது உளவு பார்ப்பதற்காக அல்ல,

இவ்வாறு லண்டன் சண்டே ரைம்ஸ் பத்திரிகையாளர் மேரி கத்தரின் கொல்வின் தெரிவித்துள்ளார்.

வன்னிப்பகுதிமக்களின் உண்மை நிலைவரங்களை வெளி உலகத்திற்கு தெரியப்படுத்துவதற்காகவே அங்கு சென்றேன்.

வன்னிப் பகுதிக்கு பத்திரிகையாளர்கள் செலவதற்கு தடைவிதிக்கப் பட்டிருந்த போதும் விடுதலைப புலிகளைச் சந்திக்கவும் அங்குள்ள நிலைமைகளை வெளிக்கொணர்வதற்காகவுமே, என அவர் மேலும் தெரிவித்துள்ளார். [செ]

## சம்பள உயர்வு கோரி சுருட்டுத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

[யாழ்ப்பாணம்]

வடமாகாண சுருட்டுத் தொழிலாளர் சங்கத்தினர், சுருட்டுத் தொழிலாளிகளுடைய சம்பளத்தினை நூறு சுருட்டுக்கு 25ரூபா என்பதில் இருந்து நூறு சுருட்டுக்கு 40 ரூபாவாக உயர்த்தித் தருமாறு கோரியதை அனேகமான முதலாளிமார் ஏற்றுக் கொண்டுள்ள போதிலும் இன்னும் சில முதலாளிமார் அக்கோரிக்கையை ஏற்கவில்லைஎனச்சுருட்டுத்தொழிலாளர் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

அவ்வாறு சம்பளத்தை உயர்த்திக் கொடுக்காத முதலாளிமாரிடம் வேலை செய்யும் தொழிலாளிகளை வேலையை நிறுத்தி போராட்டம் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். [உ2]

## வீதி விஸ்தரிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சந்தையடி ஒழுங்கையை 12 அடிக்கு மேல் இருக்கக் கூடியதாக ஊர்மக்களின் உதவியுடன் மாற்றியமைத்தல், மேற்படி வீதியை பொதுப்பாவனைக்கு உரியதாக பதிந்து திருத்த வேலை செய்து தரமுடியும் என வலி .கிழக்கு பிரதேச சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (உ)

# க. பொ. த உயர்தர மாணவர்க்கான உயிரியல் பாட வினாக்கள் - 10

ஆசிரியர் கே. சுகந்தன் B.Sc

**மாதிரி அமைப்புக் கட்டுரை வினா-1**

ஒரு தாவர இனத்தில் சிவப்பு நிற பூக்களையுடைய தன்மை (R) வெள்ளை நிறப் பூக்களையுடைய (r) தன்மையிலும் ஆட்சியுடையது. தூய விருத்தி செய்கின்ற சிவப்புப் பூக்களைக் கொண்ட ஒரு தாவரம், வெள்ளை நிறப் பூக்களைக் கொண்ட தாவரத்துடன் இனங்கலக்கப்பட்டது.

i) F1 தாவரங்களின் பிறப்புரிமையமைப்பையும் தோற்ற அமைப்பையும் தருக?

ii) F1 தாவரங்கள் தற்கருக்கட்டல் செய்யப்பட்டு F2 தாவரங்களைப் பெற்றால் F2 தாவரங்களின் பிறப்புரிமையமைப்புக்களையும் தோற்ற அமைப்புக்களையும் தருக?

iii) சிவப்பு பூக்களைக் கொண்ட F2 தாவரம் ஒன்று ஓரினநுகமானதா அல்லது இதரநுகமானதா என எவ்வாறு கண்டுபிடிப்பீர் என விளக்குக?

iV) மேலே கூறப்பட்ட இனக்கலப்பில் இன்னொரு இயல்பான பச்சை வித்து (G) மஞ்சள் வித்து g இற்கு ஆட்சியுடையது. எதிருருக்கள் R, r உடன் G, g இணைந்துள்ளன எனக் கொள்க.
குறுக்குப் பரிமாற்றம் ஏற்படவில்லை எனக் கருதி இவ் இரு சோடியான எதிருருக்களைப் பொறுத்த மட்டில் F2 தாவரங்களின் பிறப்புரிமையமைப்புக்களையும் அவற்றின் தோற்ற அமைப்புக்களையும் தருக?

V) இவ்விரு சோடியான எதிருருக்களுக்கும் இடையில் குறுக்குப் பரிமாற்றம் ஏற்பட்டது எனக்கருதின் F2 தாவரங்களினது பிறப்புரிமையமைப்புக்களும் தோற்ற அமைப்புக்களும் யாவை?

Vi) a) இணைப்பு இல்லாவிடின் F2 இல் தோன்றும் தோற்ற அமைப்புக்களில் என்ன விகிதத்தை எதிர்பார்ப்பீர்?

b) இங்கு இணைப்பு இருப்பதால் எதிர்பார்க்கும் விகிதத்தில் என்ன மாற்றத்தை அவதானிக்கலாம்? காரணம் தருக?

C) இணைப்பு இல்லாவிடின் F1 தாவரத்தினை சோதனைக் கலப்புக்கு உட்படுத்தினால் F2 இல் பெறப்படும் தோற்ற அமைப்புக்களின் விகிதம் யாது?

d) மேலே (C) இல் இணைப்பு இருப்பின் F2 இல் தோற்ற அமைப்புக்களின் விகிதத்தில் ஏற்படும் மாற்றம் யாது?

**வினா-2**

1) i) கலப்பிரிவுக் கட்டங்களின் ஒன்றில் நடைபெறும் நிகழ்வுகளைப் பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் விவரிக்கின்றன. அக்கூற்றுக்கள் ஒவ்வொன்றிற்கும் தரப்பட்ட வரணத்திற்குப் பொருத்தமான கலப்பிரிவு வகைகளையும் அவத்தையையும் கட்டத்தையும் பெயரிடுக?

a) நிறமூர்த்தங்கள் சுருங்கித் தடிப்படைகின்றன; அரைநிற உருக்களுக்கிடையில் குறுக்குப் பரிமாற்றம் நடைபெறுகின்றது;

b) அமைப்பொத்த நிறமூர்த்தங்கள் ஒன்றிலிருந்தொன்று விலகி கோப்புக்கள் தோன்றுகின்றன;

c) அமைப்பொத்த நிறமூர்த்தங்கள் ஒன்று சேர்ந்து சமாந்தரமாக அமைந்து சோடிகள் இருவலுவுள்ளவையாகத் தோன்றுகின்றன.

d) நிறமூர்த்தங்கள் உச்ச அளவுக்குச் சுருங்கிக் காணப்படுகின்றன. நிறமூர்த்தங்களின் நுனிகளுக்கு கோப்புக்கள் அசைகின்றன;

e) நிறமூர்த்தங்கள் சுருண்டு தடிப்படைந்து சுருங்கிய மெல்லிய நூல் போன்றுதென்படும,

ii) பின்வரும் வர்ணனை ஒவ்வொன்றையும் எடுத்துக் கட்டும் சொற்றொடரை எழுதுக?

a) ஒரு தாவரத்தின் பிறப்புரிமை வகையை நிர்ணயிக்கும் முகமாக ஓரினநுகத்திற் குரிய பின்னடைவுடன் செய்யப்பட்ட இனங்கலத்தல்;

b) ஒரு பல்லினநுகம் இருஓரினநுகங்களுக்கு இடைப்பட்ட இயல்பைக் காட்டும் நிலைமை,

c) தோற்றமைப்பின் மீதுகூட்டற் தகவுடைய விளைவுகளைக்கொண்ட இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பரம்பரை அலகுகளால் நிர்ணயிக்கப்படும் தோற்றக் கூறுகள்.

d) ஒரு கலத்தில் இருமடிய எண்ணிக்கைக்கு மேலாக நிறமூர்த்தங்கள் காணப்படும் நிலைமை,

iii) ஒரு தாவர இனத்தில்நெட்டையான தன்மை(T) குட்டையானதன்மைக்கு (t) ஆட்சியானதெனவும் சிவப்பு நிறப்பூ(R)வெள்ளைநிறப்பூ(r)ஆட்சியானதெனவும் கொள்க சிவப்புப் பூக்களையுடைய நெட்டையானதொரு தாவரம் வெள்ளைப் பூக்களையுடைய குட்டையானதொரு தாவரத்துடன் இனங்கலக்கப்பட்ட போது கீழே காட்டப்பட்டபடி தோன்றல்கள் பெறப்பட்டன.

| நெட்டையான சிவப்பு | நெட்டையான வெள்ளை | குட்டையான சிவப்பு | குட்டையான வெள்ளை |
|---|---|---|---|
| 42 | 9 | 8 | 41 |

a) இவ் இனக்கலப்பின்போது பயன்படுத்தப்பட்ட இரு பெற்றோரின் பிறப்புரிமையமைப்புக்களை எழுதுக?

b) மேலே(a) இல் பிறப்புரிமையமைப்பை எவ்வாறு தீர்மானித்தீர்?

c) மேலே தரவில் தரப்பட்ட தோன்றல்களில் பெறப்பட்ட நெட்டையான வெண்ணிறப் பூக்களையுடைய தாவரமும் குட்டையான சிவப்பு நிறப்பூக்களையுடைய தாவரமும் மீண்டும்இனங்கலக்கப்பட்டால் பெறப்படும் தோன்றல்களிற் காணப்படும் பிறப்புரிமையமைப்பு வகைகள் தோற்றவமைப்பு வகைகள் எதிர்பார்க்கப்படும்விகிதசமன்கள் என்பவற்றைத் தருக?

## பட மாளிகையில் மோதல்; பாடசாலை மாணவர் மீது தாக்கு

[யாழ்ப்பாணம்]

சுன்னாகத்தில் பிரபலமான திரை அரங்கு ஒன்றின் நடத்துநர்களுக்கும் இரசிகர்களுக்குமிடையே மோதல் சம்பவம் கடந்த செவ்வாய் அன்று நடைபெற்றுள்ளது.

நடத்துநர்களுக்கும் இரசிகர்களுக்குமிடையே இடம் பெற்றவாய்த்தர்க்கம் கைகலப்பு வரை சென்றதாகவும், இச் சம்பவத்தின் போது தெல்லிப்பழையின் ஓர் பிரபல பாடசாலையின் 5 மாணவரசிகர்கள் அறைஒன்றினுள் பூட்டப்பட்டு தாக்கப்பட்டதாகவும் தெரிய வந்துள்ளது. (உ-2)

## விவசாய விளைபொருள் பதனிடும் தொழிற்சாலை விரைவில் அமையும்

(யாழ்ப்பாணம்)

பட்டினிக்கு எதிரான நிறுவனத்தினதும் சுன்னாகம் ப.நோ கூ சங்கத்தினதும் ஏற்பாட்டில் உடுவிலில், விவசாய விளைபொருட்கள் பதனிடும் தொழிற்சாலை அமையவுள்ள கட்டடத்தின் திருத்த வேலைகள் துரித கதியில் நடைபெற்று வருவதினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அத்துடன் அக் கட்டடத்திற்கு அருகாமையில் அமைந்துள்ள நலன்புரி நிலையத்தின் மலசல கூடங்களை அகற்றுவது சம்பந்தமான நடவடிக்கை எடுப்பதற்கான கூட்டம் எதிர் வரும் 24 ஆம் திகதி உடுவில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் பி.ப. 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (உ-2)

## சமாதானப் பேச்சுக்களில் நோர்வேயின் பங்கு எந்தநிலையிலும்அவசியம்

### அன்ரன் பாலசிங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமானவுடன் நோர்வேயின் பங்களிப்பு முடிவுக்கு வந்துவிட முடியாது என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்:

அரசும் விடுதலைப்புலிகளும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தவுடன் நோர்வேயின் பங்களிப்பு முடிந்துவிடும் என வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்த கருத்திற்கே அன்ரன்பாலசிங்கம் மேற்படிமறுப்புக்கருத்துத் தெரிவித்துள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளை, லக்ஷ்மன் கதிர்காமர் விதிக்கும் வரம்பிற்குள் நின்று தொடர முடியாது:

சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடக்கும் பொழுது நோர்வேயின் பங்களிப்பு இருக்க வேண்டும்;

பேச்சுவார்த்தையின் போது இரு தரப்பினருக்குமிடையில் எழும்தப்பபிப்பிராயங்களை போக்குவதற்கு பேச்சுக்களில் முன்னேற்றம் ஏற்படுவதற்கும் நோர்வேயின் கண்காணிப்பு அவசியம்;

இவ்வாறு அன்ரன் பாலசிங்கம் மேலும் கருத்து தெரிவித்துள்ளார்;

இதேவேளை, அரச புலிகள் தரப்பினரை சமாதானப் பேச்சுக்களில் ஈடுபடுத்துவதுடன் தமது கடமை முடிவடைந்துவிடும் என நோர்வே தூதுவர் முன்பு கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது; (செ-உ)

## வினா இல-07

### விடைகள்

**வினா I**

1) பெப்ரைட்
2) நியூக்கிளியோரைட்
3) 5
4) புன்னங்கங்கள்
5) கலத்தகவன்கூடு
6) கலமென்சவ்வு
7) பொஸ் போலிப்பிட்
8) கிளைக் கோஜன்
9) அழுத்தமான
10) இலை சோசோம்
11) சுருங்கத்தக்க
12) நிறமூர்த்தம்
13) புன்கரு
14) உச்சி / முகடு
15) ATP
16) குளுக்கோஸ்
17) தைலோகொயிட்
18) மணியுரு
19) மியூக்கோ பெப்ரைட்
20) மீசோசோம்

**வினா II**

1) 46
2) மையப் பாத்து
3) புணரித் தாவரம்
4) வித்தித் தாவரம்
5) ஒடுக்கற் பிரிவு
6) இடையவத்தை
7) மேன் முக அவத்தை
8) கலத் தட்டு
9) தவாளிப்பு
10) கோப்புக்கள்
11) குளுக்கோஸ்
12) நீர்
13) வெப்பம்
14) ATP
15) ADP
16) சூரியன்
17) குளுக்கோஸ்
18) கிளைக்கோப் பகுப்பு
19) $CO_2$
20) 6

**வினா III**

1) ATP, $NADH_2$, பைருவேற்
2) 2
3) எதைல் அல்ககோல்
4) அசற்றைல் CoA
5) கீழ்ப்படை
6) அசற்றல்டிகைட்
7) இலத்திரிக்கமிலம்
8) நீர்
9) பஞ்சணை
10) 1

(சனிக்கிழமை தொடரும்)

## அலங்கார வளைவு

### அடிக்கல் நாட்டல்

நல்லூர் பிரதேச சபையின் எல்லையை குறிக்கும் அலங்கார வளைவு அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும்வைபவம் நேற்றுநண்பகல் ஒருமணியளவில் நல்லூர் பிரதேச சபைத்தலைவர்க: மணிபல்லவராஜன்தலைமையில்பலாலி வீதி பரமேஸ்வராச்சந்திக்கு அண்மையில் நடைபெற்றது.

மேற்படி நிகழ்வில் பிரதேச சபைச் செயலர் செ. செல்வரத்தினம், வலிமேற்குப் பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(உ-15)

## இன்று ஒரு தகவல்

# மனைவியின் பாசம் என்ன?

ஒரு சமயம் குரு ஒருவர் தன்னுடைய சீடனிடம் 'இந்த வாழ்க்கை உண்மையல்ல. நீ என்னுடன் வந்துவிடு' என்றார். அதற்குச் சீடன் குருவிடம் 'ஐயா! என்னுடைய மனைவி என்னைப் பொறுப்புடன் கவனித்துக் சொள்கிறாள். அவளை விட்டு விட்டு நான் உங்களோடு வர முடியாது' என்றான். சீடனுக்குச் சிறிது ஹடயோகம் தெரியும். குரு அவனுக்குப் 'பந்தி' என்ற ஒருவகையான ஹடயோகப் பயிற்சியைக் கற்றுக் கொடுத்திருந்தார். ஒரு நாள் அவனுடைய வீட்டில் ஒரே கூச்சலும் அழுகையும் எழுந்தன! அக்கம் பக்கத்து வீட்டார்கள் எல்லாம் அங்குவந்து கூடினார்கள். அந்தக் ஹடயோகி ஆசனம் போட்டு அமர்ந்திருப்பதையும், அவன் முகம் கோணலாக இருப்பதையும் பார்த்து, அவர்கள் எல்லோரும் 'அவன் இறந்துவிட்டான்' என்ற முடிவுக்கு வந்தார்கள்.

அவனுடைய மனைவி முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு அழுதாள். 'ஐயோ, எனக்கு வந்த வேதனை தான் என்ன? எனக்கு ஒரு வழியும் செய்யாமல் இப்படி நீ என்னை ஏமாற்றி விட்டுப் போய் விட்டாயே! ஓ இப்படி ஏற்படும் என்று நான் கனவிலும் நினைக்கவில்லை' என்று சொல்லி அழுதாள். இதற்கிடையில் உறவினர்களும், நண்பர்களும் அவனது உடலை அறையிலிருந்து வெளியே கொண்டு வரும் பணியில் ஈடுபட்டார்கள். அப்போது ஒரு சிக்கல் ஏற்பட்டது அதாவது, அந்த ஹடயோகி யோக நிலையிலேயே கைகால்களை விரித்து பல கோணல்களோடு இருந்ததால் வாசற்படி வழியாக வெளியே கொண்டு வர இயலவில்லை. அந்தச் சமயத்தில் ஒருவன் ஓடிப் போய் ஒரு கோடரியைக் கொண்டு வந்து வாயிற்படியை இடிக்க முற்பட்டான்.

'ஓ'வென்று அழுது கொண்டிருந்த மனைவி வாயிற்படி இடிக்கப்படும் சத்தத்தை கேட்டு அங்கு ஓடி வந்தாள். அழுது கொண்டே அவள் என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டாள். அதற்கு அவர்கள் 'இவனுடைய உடலை வெளியே கொண்டுவர முடியவில்லை. அதனால் வாயிற்படியைச் சிறிது இடிக்கவேண்டியிருக்கிறது என்றார்கள். அதற்கு மனைவி, ஐயோ! அப்படியெல்லாம் செய்யாதீர்கள். நான் எல்லாவற்றையும் இப்போது இழந்து விட்டேன். இனிமேல் என்னைக் காப்பாற்ற யாரும் இல்லை. சின்னஞ் சிறிய குழந்தைகள் பலரை நான் பராமரிக்க வேண்டியிருக்கிறது. இந் நிலையில் இந்த வாசற்படியையும் நீங்கள் இடித்து விட்டால், வேறு படி வைக்க நான் எங்கே போவேன்? அவரோ போனதுபோய் விட்டார். இனி அதை மாற்றமுடியாது. வேண்டுமானால் அவருடைய கைகால்களை வெட்டி வாசற் படி வழியாக எடுத்துச் செல்லுங்கள், என்றாள் அவள் அப்படிச்சொன்ன போது அந்த ஹடயோகி எழுந்து கொண்டான். அவன் உட்கொண்டிருந்த மருந்தின் மயக்கம் மறைந்து விட்டது. அவன் அவளைப் பார்த்து 'வெட்கம் கெட்டவளே! என் கை கால்களையா வெட்டச் சொல்கிறாய்' என்று கூறியபடியே வீட்டைத் துறந்து குருவோடு போய் விட்டான்.

ஸ்ரீ. இராமகிருஷ்ணர்

# ஓட்டுத் தொழிற்சாலையை மீண்டும் இயக்க நடவடிக்கை

(கல்வயல்)

மாங்குளம் ஒட்டிசுட்டானில் உள்ள ஓட்டுத்தொழிற்சாலையைபுனரமைப்புச்செய்யும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக வடக்கு புனர்வாழ்வு அமைச்சு வட்டாரங்கள தெரிவித்துள்ளன.

இதுகுறித்து ஆய்வுசெய்து அறிக்கைஒன்றை சமர்ப்பிக்குமாறும் சம்பந்தப்பட்ட நிபுணருக்கு அமைச்சு உத்தரவிட்டுள்ளதாக மேலும் அறியப்படுகிறது.

குறிப்பிட்ட பகுதி இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்குள் அமைவதால பல் வேறு நிர்வாக சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் மேற்படி திட்டம் வெற்றியளிக்கும்வரை ஓடுகள், செங்கற்களை இறக்குமதி செய்ய ஒரு கம்பனியை உருவாக்க சம்பந்தப்பட்ட அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-111)

## 12 அமைச்சர்கள் வெளிநாடுகளில்

(கொழும்பு)

ஒரேநேரத்தில் 12 அமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருப்பதினால்அமைச்சின் பணிகளில் தடைகள் ஏற்பட்டிருப்பதாக அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சர் ஜி, எல். பீரிஸ் உட்பட பல அமைச்சர்கள் தற்போது வெளிநாடு சென்றுள்ளனர். இவர்களைவிட மேலும் பல அமைச்சர்களும் வெளிநாடு செல்லவுள்ளனர். (வ)

# நோர்வேயின் சமாதான முயற்சிகளைக் கைநழுவ விடக்கூடாது

[கொழும்பு]

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுத்தும் விதத்தில் செயற்படும் நோர்வேயின் சமாதான முயற்சிகளை கைநழுவ விடக்கூடாது என திருகோணமலை மட்டக்களப்பு ஆயர் அதிவண. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

நோர்வேயின் சமாதான முயற்சிகளை கைநழுவ விடுவோமேயானால் எதிர்கால சந்ததியினருக்கு பதில் அளிக்கமுடியாதவர்களாவோம்.

இனப்பிரச்சினைக்கானசமாதான முயற்சியில் அரசும், விடுதலைப் புலிகளும் இதயசுத்தியுடன் விட்டுக் கொடுத்து சுமுகமான தீர்வைக் காண வேண்டும்

நோர்வேயின் சமாதான முயற்சிகளை சர்வதேச சமூகமும அரசும், விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அத்துடன் வடக்கு-கிழக்கு மாகாண தமிழ் மக்கள் நோர்வேயின் சமாதான முயற்சிகளை வ வேற்றுளமையை அனைவரும் கருத்திற் கொள்ளவேண்டும்.

இவ்வாறு ஆயர் மேலும் கருத்துத் தெரிவித்துளார். [செ]

## இறுதிநாள் நிகழ்வுகள்

(சுண்டுக்குளி)

சுண்டுக்குளி, கிறீங்கிஸ் விளையாட்டுக்கழகத்தின்வருடாந்த விளையாட்டுப்போட்டிகளின்இறுதிநாள் நிகழ்வும் பரிசளிப்பு வைபவமும்கழகத் தலைவரின் தலைமையில், கழக விளையாட்டு அரங்கில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்றது.

இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ், சென் சாள்ஸ் மாகவித்தியாலயத்தின் அதிபர் திருமதி எம். சின்னத்துரை. சிறப்பு விருந்தினராக கப்டன் டி. எ. எம், குணசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (உ-110)

# தண்ணீர்கேட்ட சிறுமிக்கு பெற்றோல் கொடுத்த விஷமிகள்

(கொழும்பு)

தண்ணீர் அருந்தக் கேட்ட சிறுமிக்கு, விஷமிகள்சிலர்பெற்றோல் அருந்தக் கொடுத்த சம்பவம் மாத்தளையில் இடம் பெற்றுள்ளது.

சித்திரைப் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு வங்கி ஒன்றினால் ஏற்பாடு செய்யப்பட்ட விழாவில் பணிஸ் சாப்பிடும் போட்டியில் இச்சிறுமி கலந்து கொண்டார். பணிஸ் சாப்பிட்ட பின்னர் இச்சிறுமி தாகம் ஏற்பட்டதனால் அருகில் இருந்தவர்களிடம் தண்ணீர் கேட்டபொழுதே இவ் விஷமிகள் பெற்றோலை அருந்தக் கொடுத்துள்ளனர்.

பெற்றோலை அருந்திய இச்சிறுமி ஆபத்தான நிலையில் மாத்தளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எஸ். பிரியங்கனி (வயது 10) என்ற சிறுமியே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார். (செ)

## உதவிப் பணத்தை பெறுக

(மந்திகை)

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவில் உதவிப்பணம் பெறுவோருக்கான கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

பொதுசன மாதாந்தஉதவிப் பணம் புற்றுநோய் என்பனவற்றுக்கான கொடுப்பனவுகளை அந்தப்பகுதி தபால், உபதபால் அலுவலகங்களில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்பதாக பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-23)

# ஒரு ரூபா கொண்டுவருமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்து

(இணுவில்)

மருதனாமடம் சந்தைக்கு பொருட்கள் வாங்கச் செல்லும் பொதுமக்கள் தினமும் ஒரு ரூபா கொண்டுவரும்படி வரி வசூலிப்பாளர்களால் அறிவுறுத்தப்படுகின்றனர்.

இதனால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாவதாகவும் சந்தையில் வரி, வசூலிப்போர் மாற்று ஏற்பாடுகளை மேற்கொளவது அவசியம் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-49)

# மாணவர்கள் உட்பட ஐவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த ஐவரைக் காணவில்லையென உறவினர்களால் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆம் திகதி நிவாரணம் எடுக்கவென வீட்டில் இருந்து புறபட்டுச்சென்ற வட்டுக்கோட்டையைச் சேர்ந்த குணரட்ணம் விஜயன் (வயது 20),

இம்மாதம் 16 ஆம் திகதி வீட்டைவிட்டு புறப்பட்ட யா/மத்திய கல்லூரி உயர்தர கலைப்பிரிவு மாணவர்களான நல்லூரைச்சேர்ந்த திருச்செல்வம் யதுர்சன் (வயது 18) கல்வியங்காட்டைச்சேர்ந்த பாலசுப்பிரமணியம் ஜெயந்தபவன் (வயது 17), ஹாட்லிக் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவனான புலோலி தெற்கைச்சேர்ந்த பரமநாதன் பிரதீபன் (வயது 19),

கடந்த வருடம் ஆனிமாதம் 6 ஆம் திகதி தென்மராட்சிக்குத் தேங்காய் பிடுங்கவெனச் சென்ற கரவெட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சுமித்திரன் (வயது 28) ஆகியோரையே காணவில்லையென உறவினர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## நூல் அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

''நீதிபதியின் மகன்'' சிறுகதைத் தொகுப்பு நூல் அறிமுக விழா கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நாளை ஞாயிறு காலை 9.30மணியளவில் இடம்பெறவுள்ளது.

தேவரையாளி இந்துக் கல்லூரி உப-அதிபர் தெணியான் தலைமையில் நடைபெறும் மேற்படி விழாவில் அறிமுக உரையை முன்னாள் உப-அதிபர் ஆ. கந்தையா நிகழ்த்துவர்.

உதவிக்கல்விப்பணிப்பாளர் கே. ஆர். டேவிட் யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் எஸ். சிவலிங்கராசா ஆகியோர் மதிப்பீட்டுரையை நிகழ்த்துவார்.

ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இந்நூலின் மொழி பெயர்ப்பு தினகரன் பிரதம ஆசிரியர் ராஜஸ்ரீ காந்தனால் நிகழ்த்தப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது, (க)

# ஆலயச் சிலைகளை பொலிஸார் கைப்பற்றினர்

[யாழ்ப்பாணம்]

சரசாலைப பகுதியில் திருடிவரப்பட்ட விக்கிரகங்கள, நீதிமன்ற உத்தரவுப்படிஇணுவில் சிவன் கோவிலில் வைக்கப்பட்டுள்ளன.

கடந்த 12 ஆம் திகதி சரசாலை நுணுவில் பிள்ளையார் ஆலயத்தில இருந்து பெறுமதி மிக்க விக்கிரகங்களைக் களவாடி வந்தவேளை அச்சுவேலிப் பொலிஸாரால் கள்வர் சிலர் கைதுசெய்யப்பட்டனர்.

பின்னர் இவர்கள மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டபோது விக்கிரகங்களை இணுவில் சிவன் ஆலயததில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (உ)

# கிராம அலுவலர்களின் கொடுப்பனவை இரட்டிப்பாக்க அமைச்சர் பணிப்பு

[கொழும்பு]

கிராமசேவை அலுவலர்களின் அலுவலக வசதிகளுக்கென இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவுகளை இரட்டிப்பாக வழங்குமாறு பொது நிர்வாக உள் நாட்டலுவல்கள் அமைச்சர் றிச்சர்ட் பத்திரன உத்தரவிட்டுள்ளார்.

கிராம அலுவலர்களின் அலுவலக வசதிக்கென தற்போது 150 ரூபா மட்டுமே வழங்கப்பட்டுவருகிறது. இத்தொகையை 300 ரூபாவாக அதிகரிக்குமாறும், நகரப்புறத்தில் உள்ள கிராம அலுவலர்களுக்கு 500 ரூபா வழங்குமாறும் அமைச்சர் மேலும் தமது உத்தரவில் தெரிவித்துள்ளார். [க-வ]

# இஸ்ரேல் தூதரகம் இலங்கையில் திறக்கப்படும்

(கொழும்பு)

இஸ்ரேல் தூதரகம் இலங்கையில் திறக்கப்படும் சூழ்நிலை தோன்றியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

1970 ஆம் ஆண்டிற்குப் பின் இரு நாடுகளினதும் இராஜதந்திர உறவுகள் நிறுத்தப்பட்டிருந்தது

அதன்பின்னர் சிலகாலம் அமெரிக்கத் தூதரகத்துடன் இஸ்ரேல் நலன்காக்கும் பிரிவு இயங்கிவந்தது. இப்பிரிவும் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பாங்கொங்கிலுள்ள இஸ்ரேல் தூதரகமே இலங்கையில இஸ்ரேலின் நலன்களைக் கவனித்து வருகிறது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் இஸ்ரேலின் தலைநகரில் இலங்கைத் தூதரகம் திறந்து வைக்கப்பட்டது இதனையடுத்து மிக விரைவில் இஸ்ரேலின் தூதரகம இலங்கையில் திறந்து வைக்கபடுமென தெரிவிக்கப்படுகிறது. (ந)

## புதிய குடும்ப அட்டை விநியோகம்

(அச்சுவேலி)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு புதிய குடும்ப அட்டை இன்று அவ்வப்பகுதி கிராமசேவகர் பிரிவு அலுவலகங்களில் வைத்து வழங்கப்படவுள்ளது. (க-14)

### அடிமைத் தொழிலில் ஈடுபடுத்த அழைத்துச் செல்லப்பட்ட

# நூற்றுக்கணக்கான சிறுவர் மீட்பு

(லண்டன்)

அடிமைத்தொழிலில் ஈடுபடுத்துதற்காக மேற்கு ஆபிரிக்க நாடுகளில் இருந்து நூற்றுக்கணக்கானவர்களை ஏற்றிச் சென்ற கப்பல் ஒன்று பெனின் குடியரசின் துறைமுகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

தடுத்து வைக்கப்பட்ட கப்பலில் இருந்த அடிமைச்சிறார்கள் மீட்கப்பட்டு தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அதிகளவு பணம் வழங்குவதாகவும் நல்ல உணவு தருவதாகவும் கூறிபேகமமை ஏற்றி வந்ததாக விடுவிக்கப்பட்ட சிறுவர்கள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்துள்ளனர். (உ-9)

## பிலிப்பைன்ஸ் படைகள் கெரில்லாக்கள் மோதல்

[மணிலா]

பிலிப்பைன்ஸில் படையினருக்கும் அபு செய்யாப்கெரில்லாக்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் 12 கெரில்லாக்கள் கொல்லப் பட்டுள்ளனர்.

அத்துடன் இரண்டு சிவிலியன்களும் கொல்லப்பட்டுள்ளதாய் அறிய முடிகிறது.

படையினருடனான மோதலின் போது மனிதக் கேடயமாக கெரில்லாக்களால்பயன்படுத்தப்பட்ட இரு சிவிலியன்களே பலியாகி உள்ளனர். (உ-9)

## சோனியா மீதான சி.பி.ஐ. விசாரணை தாமதம்

[புதுடில்லி]

காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா மீது ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணிய சுவாமி சுமத்திய புகார்கள் தொடர்பாக சி.பி.ஐ. இன்னனும் விசாரணை தொடங்கவில்லையென்று மத்திய அரசு கூறியுள்ளது.

சுப்பிரமணிய சுவாமியின் குற்றச்சாட்டுக்கள் விசாரணைக்குட்படுத்தக்கூடியதா என்று தாம் பரிசீலனை செய்து வருவதாக சி.பி.ஐ. கூறியுள்ளது.

இதேவேளை, சோனியா மீதான ஜனதாக்கட்சி தலைவர் சுப்பிரமணியசுவாமியின் புகார்கள் தொடர்பாக சி.பி.ஐ. விசாரணை செய்ய வேண்டுமென மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது என்றும் வாஜ்பாய் அரசைக் குற்றம் சாட்டி அவரது அனைத்துக் கட்சிக் கூட்டத்தை காங்கிரஸ் கட்சி புறக்கணித்து இருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-9)

## காஸா நிலப்பரப்பு இஸ்ரேல்படையினர்வசம்?

(காஸா)

பலஸ்தீனியர்களின் கட்டுப்பாட்டில் உள்ள காஸா நிலப்பரப்பினை இஸ்ரேலியப் படையினர் மீண்டும் ஆக்கிரமித்துள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

காஸாப் பகுதியில் உள்ள பலஸ்தீனப் படைகளின் பாதுகாப்பு நிலைகளின் மீது கடந்த இரு நாட்களாக உக்கிர தாக்குதலை தொடுத்த இஸ்ரேலியப் படைதற்போது காஸா, நிலப்பரப்பை கைப்பற்றி விட்டதாக செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை, அமைதி நடவடிக்கையின் ஓர் அங்கமாக பலஸ்தீனர்களுக்கு வழங்கப்பட்ட காஸாப் பகுதிக்குள் இஸ்ரேல் மீண்டும் அத்துமீறி நுழைவது கண்டிக்கப்பட வேண்டும் என பலஸ்தீனத் தலைவர் ஜஸீர் அரபாத்தெரிவித்துள்ளார். (உ-9)

## மொறோக்கோ பிரதமர் பாகிஸ்தான் விஜயம்

(லண்டன்)

மொறொக்கோவின்பிரதமர் அப்துர் ரஹ்மான் அல்யூசுபி உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு பாகிஸ்தான் சென்றுள்ளார்.

பாகிஸ்தானுக்குச் சென்ற ரஹ்மானை அந் நாட்டு இராணுவ ஆட்சியாளர் பெர்வேஸ் முஷாரப் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றார்.

மேற்படிவிஜயத்தின்போது மொறோக்கோ - பாகிஸ்தானுக்கு இடையிலான நட்புறவுகுறித்தும் பொருளாதார அரசியல் நிலமைகள் குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது. (உ-9)

## சீன ஆதரவாளர் அமெரிக்க தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம்

(பீக்கிங்)

தென் சீனக் கடற் பரப்பில் இடம்பெற்ற அமெரிக்கா சீன விமான மோதலின் போது சீன விமானம் கடலுக்குள் வீழ்ந்தது குறித்து வாஷிங்டன் சீனாவிடம் மன்னிப்புக் கோர வேண்டுமென்று ஹொங்கொங்கில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன் சீன ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர்.

ஹொங்கொங்கின் முன்னேற்றத்துக்கான கூட்டமைப்பின் உறுப்பினர்கள் 30 பேர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

சீனாவின் கடலோரப் பகுதிகளில் அமெரிக்க உளவு விமானங்கள் வேவு பார்ப்பது நிறுத்தப்பட வேண்டும் என்றும் இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். [உ-9]

## பெருநாட்டின் முப்படை தளபதிகளும் இராஜினாமா

(லண்டன்)

பெரு நாட்டின் முப்படைத் தளபதிகளும் இராஜினாமாச் செய்துள்ளனர்.

பதவியில் இருந்து வெளியேற்றப் பட்ட முன்னாள் ஜனாதிபதி அல்பேர்ட்டோ பியூகிமோலியை இவர்கள் இரகசியமாக ஆதாரித்து வருவதாக எழுந்தகுற்றச்சாட்டை அடுத்தே தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர்.

இராணுவத் தளபதி கார்னோஸ் டபுர், கடற்படைத் தளபதி விக்டர் ராமோஸ் மற்றும் விமானப் படைத் தளபதி பெப்ரோ காபோன் ஆகியோரே தமது பதவிகளை இராஜினாமாச் செய்துள்ளனர். [உ-9]

## குழந்தை வரம் கேட்டு ஆச்சிரமம் சென்ற பெண் மாயமாக மறைவு

(சென்னை)

குழந்தைவரம் கேட்டு ஆச்சிரமம் சென்ற 25வயதுப் பெண்மணி மாயமாக மறைந்த சப்பவம் இந்தியாவின் கோவில் பட்டிக் கிராமத்தில் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் அறிய வருவதாவது: கனக வள்ளி என்ற பெண் திருமணம் செய்து 8வருடங்களாகியும் குழந்தைப் பேறில்லாத காரணத்தினால் அயலில் உள்ள ஆச்சிரமம் ஒன்றிற்குச் சென்றுள்ளார்.

அதன்பின் அப்பெண் அங்கிருந்து திரும்பவில்லையென்று தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் தொடர்பாக அவ் ஆச்சிரமத்திலுள்ள ராமானுஜம் (வயது50) என்ற பூசாரியை பொலிஸார் விசாரித்து வருகின்றனர். (உ-9)

## தேர்தலை ஒட்டி நாடாளுமன்றம் கலைப்பு

(லண்டன்)

பல்ஹேரிய நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கலைக்கப்பட்டுள்ளது.

17ஆம் திகதி வரவிருக்கும் நாடாளுமன்றத் தேர்தலையொட்டி இது கலைக்கப்பட்டுள்ளது.

1989 ஆம்ஆண்டுகம்யூனிஸ் ஆட்சி பல்ஹேரியாவில் முறியடிக்கப்பட்டபின் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுவது இதுவே முதல்தடவையாகும். (து)

## த. மா கா. உறுப்பினர்கள் அ. இ அ. தி. மு. கவை எதிர்த்து போட்டியிட முடிவு

[சென்னை]

அ.இ.அ.தி.மு.க கூட்டணியில் இருந்து த. மா கா எம்.எல்.ஏ. க்கள் பலருடைய தொகுதிகள் பறிக்கப்பட்டதை அடுத்து, பொன்னம்மாள் உட்பட 5 பேர் அ.இ.அ.தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை எதிர்த்து சுயேச்சையாக போட்டியிட முடிவுசெய்துள்ளதாகஅறிவித்துள்ளது.

இதேவேளை, அ. இ. அ. தி. மு. க கூட்டணியில் த. மா. கா சேர்ந்ததை ப. சிதம்பரம் கடுமையாக எதிர்த்த போதிலும் அதைக் கேட்காமல்ஜெயலலிதாவிடம்போய்ச் சேர்ந்த மூப்பனாருக்கு தகுந்த தண்டனை கிடைத்துள்ளது என முதல்வர் பரிகாசம் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-9)

## தேர்தல் விதிமுறைப்படி ஜெயா மீது நடவடிக்கை

(சென்னை)

தேர்தல் விதி முறைப்படி ஜெயலலிதா மீதுநடவடிக்கை எடுக்கப்படும். எவருக்காகவும் தேர்தல் விதி முறைகளில் மாற்றம் செய்ய நாம் தயாரில்லை என்று கிருஷ்ணகிரி தொகுதியின் தேர்தல் அதிகாரி ஆர்.டி.ஓ மதிவாணன் தெரிவித்துள்ளார்.

வருகின்ற 24 ஆம் திகதி வேட்பு மனுக்கள் பரிசீலனை செய்யும் போது ஜெயலலிதாவின் மனு குறித்து தகுந்த முறையில் பரிசீலனை செய்யப்படும் என்றும் மக்கள் பிரதிநிதித்துவ சட்ட தேர்தல் விதிமுறைகளின் படி நாம் தகுந்த முடிவினை எடுப்போம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல் அதிகாரியின் மேற்படி கூற்றுஜெயலலிதாவின் மனு ஏற்றுக் கொள்ளப்படுவதிலும் அவர் தேர்தலில் போட்டியிடுவது தொடர்பாகவும் சந்தேகத்தை எழுப்பியுள்ளதென அரசியல் நோக்கர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். உ-9

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

ஏப்ரல் மாதம் 18ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி, வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச ரீதியாகத் தரப்படுகின்றது.

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 178387 ஏ | 180862 ஏ |
| 184775 ஏ | 184775 பி |
| 186032 ஏ | 186032 பி |
| 186032 சி | 186205 ஏ |
| 186205 பி | 186205 சி |
| 186205 டி | 186311 ஏ |
| 186311 பி | 186311 சி |
| 186311 டி | 186311 ஈ |
| 187260 ஏ | 188886 ஏ |
| 188886 பி | 188886 சி |
| 188898 ஏ | 188898 பி |
| 188967 ஏ | 189159 ஏ |
| 189179 ஏ | 189179 பி |
| 189179 சி | 189149 டி |
| 189209 ஏ | 189209 பி |
| 189209 சி | 189220 ஏ |
| 189220 பி | 189253 ஏ |
| 190081 ஏ | 190757 ஏ |
| 190763 ஏ | 190798 ஏ |
| 190799 ஏ | 190849 ஏ |
| 190849 பி | 190849 சி |
| 190849 டி | 190854 ஏ |
| 190854 பி | 190859 ஏ |
| 190859 பி | 190863 ஏ |
| 190863 பி | 190863 சி |
| 190889 ஏ | 190914 ஏ |
| 190984 ஏ | 190998 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 185989 ஏ | 185989 பி |
| 185989 சி | 189154 ஏ |

### நல்லூர்

| | |
|---|---|
| 188891 ஏ | 188891 பி |
| 189239 ஏ | 189239 பி |
| 189257 ஏ | 189259 ஏ |
| 189290 ஏ | 189290 பி |
| 189632 ஏ | 189632 பி |
| 190764 ஏ | 190770 ஏ |
| 190770 பி | 190815 ஏ |
| 190821 ஏ | 190837 ஏ |
| 190837 பி | 190961 ஏ |

ஏப்ரல் மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளி மாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாக அனுப்பப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 158845 ஏ | 180807 ஏ |
| 180807 பி | 184728 ஏ |
| 184797 ஏ | 184797 பி |
| 184797 சி | 184893 ஏ |
| 184894 ஏ | 184894 பி |
| 185962 ஏ | 185997 ஏ |
| 185997 பி | 186087 ஏ |
| 186087 பி | 186087 சி |
| 186092 ஏ | 186092 பி |
| 186092 சி | 186092 டி |
| 186151 ஏ | 186151 பி |
| 186151 சி | |
| 186153 ஏ | 186198 ஏ |
| 186188 பி | 186188 சி |
| 186188 டி | 186188 ஈ |
| 186188 எப் | 186188 ஜி |
| 186206 ஏ | 186206 பி |
| 186326 ஏ | 186326 பி |
| 188854 ஏ | 188854 பி |
| 188854 சி | 188871 ஏ |
| 188871 பி | 188175 ஏ |
| 188175 பி | 188175 சி |
| 188175 டி | 188985 ஏ |
| 189000 ஏ | 189000 பி |
| 189036 ஏ | 189036 பி |
| 189042 ஏ | 189048 ஏ |
| 189057 ஏ | 189090 ஏ |
| 189163 ஏ | 180163 பி |
| 189166 ஏ | 189170 ஏ |
| 189172 ஏ | 189172 பி |
| 189200 ஏ | 189200 பி |
| 189200 சி | 189200 டி |
| 189206 ஏ | 189213 ஏ |
| 189213 பி | 189222 ஏ |
| 189222 பி | 189222 சி |
| 189228 ஏ | 189229 ஏ |
| 189229 பி | 189230 ஏ |
| 189232 ஏ | 189232 பி |
| 189248 ஏ | 186254 ஏ |
| 189271 ஏ | 189296 ஏ |
| 189613 ஏ | 189613 பி |
| 189613 சி | 189613 டி |
| 189613 ஈ | 189625 ஏ |
| 189625 பி | 189626 ஏ |
| 190832 ஏ | 190866 ஏ |
| 190885 ஏ | 190905 ஏ |

### கோப்பாய்

| | |
|---|---|
| 188848 ஏ | 188848 பி |

### நல்லூர்

| | |
|---|---|
| 166282 ஏ | 169282 பி |
| 180212 ஏ | 180212 பி |
| 182151 ஏ | 182151 பி |
| 182151 சி | 182151 டி |
| 184587 ஏ | 184618 ஏ |
| 185962 பி | 186039 ஏ |
| 186039 பி | 189039 சி |
| 186072 ஏ | 186072 பி |
| 186072 சி | 186072 டி |
| 186073 ஏ | 186096 ஏ |
| 186097 ஏ | 186251 ஏ |

(2ஆம் பக்கம் பார்க்க)

வேலன்று வென்றி தருவதூஉம் மன்னவன்
கோலதூஉம்கோடாதெனின்

- குறள்

# வலம்புரி

## வேறுபட்ட நீதிகள்

வெளிநாடுகளில் போய் வாழ நினைத்த தமிழ் இளைஞர்கள் இன்று நீர்கொழும்புச்சிறைச்சாலையில் அடைபட்டுள்ளனர். இந்த மண்ணில் இனயுத்தம் என்று வெடித்ததோ என்று தமிழ்இளைஞர்கள் கைது செய்யப்பட்டு சித்திரவதைமுகாமில்அடைக்கப்பட்டனரோ அன்று முதல் இந்த்மண்ணில் நிம்மதியாக, சுதந்திரமாக வாழ முடியாது என்ற எண்ணக்கரு தமிழ் இளைஞர்கள் மத்தியில் ஆழமாகப் பதிந்து விட்டது.

வேலையின்மை,.பொருளாதாரப் பின்னடைவு இந் நிலையில்!! ஓர் இளைஞன்தனது தாயின் - தந்தையின்-சகோதரங்களின் பசிக் கொடுமையை -வறுமையை எப்படிப் பார்த்துக் கொண்டிருக்க முடியும். இதனால் தனக்குள் ஓர் தீர்மானத்தை எடுக்கிறான், அத் தீர்மானமே வெளிநாட்டுப் பயணம்.

பெற்ற தாயை, பிறந்த பொன்னாட்டை, நண்பர்களை, ஆசாபாசங்களைவிட்டு உள்ளத்துறவு பூண்டே வெளிநாடு செல்லப் புறப்படுகிறான் என்பது வெளிப்படாத உண்மையாகும்.

வாழமுடியாத நிலையில் விருப்பு வெறுப்புக்களையெல்லாம் புதைத்துவிட்டு எப்பாடுபட்டாவது தமது குடும்பங்களைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கில் புறப்பட்ட அப்பாவித் தமிழ் இளைஞர்கள் வெளிநாட்டு முகவர்களால் ஏமாற்றப்பட்டு, கையிலிருந்த பணத்தையும் இழந்து மீண்டும் நாடு வந்துசேர்ந்தால்நிலைமை சிறை வாசம்.

தமிழர் என்ற ஒரே காரணத்திற்காக- சிங்கள தேசம் இது என்ற இறுமாப்பில் புதிய புதிய சட்டங்களின் தோற்றப்பாடுகளும், அதனூடே தமிழர்களை வதையிடும் வஞ்சமும் மலிந்ததன் வெளிப்பாடே இன்று நீர்கொழும்புச் சிறைச்சாலையில் தமிழ் இளைஞர்கள் விடுதலை இன்றி தவிக்கின்றனர்.

தப்பியோடிய படையினருக்கு மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கொடுப்பதற்கு சட்டம் இடங்கொடுக்குமாயின், யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளிநாடு செல்ல முயன்ற தமிழ் இளைஞர்களுக்குஒரே ஒரு தடவையேனும் மன்னிப்புக்கொடுப்பதற்கு சிங்களச் சட்டம் இடம் தரவில்லை என்பது புரிகிறதல்லவா?

---

திறனாய்வுக்களம்

# தற்கால வாழ்வையும் பிரதிபலிக்குமாறு தயாரிக்கப்பட்ட "பொங்கொலிநகரார்"

யாழ். பல்கலைக்கழக முல்லை மாவட்ட மாணவர் ஒன்றியத்தினரால், யுத்தத்தினால் அழிவடைந்து போயுள்ள முல்லை மாவட்ட பாடசாலைகளது கல்வி வளர்ச்சிக்காக யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் 04 காட்சிகளாக க. ரதி தனது எழுத்துரு நெறியாள்கையில் இற்றைக்கு 400 ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கேயருடன் போரிட்ட தமிழ் மன்னன் சங்கிலியனது கதையை தழுவியதாக ''பொங்கொலி நகரார்'' எனும் நாடக ஆற்றுகையை மேடையேற்றி பலத்த வரவேற்பை பெற்றிருந்தமையுடன் சமகால நிகழ்வுகளோடுஒன்றிச்செல்வதாகவும் பல வேளைகளில் எடுத்துக் காட்டாகவும் அமைந்து விட்டமை மேற்படி ஆற்றுகைக்கு கிடைத்து விட்ட பெருமைமிக்க சிறப்புக்களாகும்;

### பாத்திரங்களின் பாணியும் கருவிகளும்

இந்த வகையில் மட்டுமன்றி பல்வேறு வகைகளிலும் சிறப்பான முறையில் ஆற்றுகைப்படுத்தப்பட்டிருந்த மேற்படி நாடகத்திற்கு மேலும் மெருகூட்டுவனவாக பின்னணி இசை, ஒளியமைப்பு, காட்சிவிதானிப்பு, ஒப்பனை. வேடஉடை, வசன நடை, பாத்திர அமைவு, அரங்கநிர்ணயம் எனப் பலவும் நாடக மூலக்கூறுக்களது அத்தனை பரிமாணங்களினையும் ஒட்டுமொத்தமாக சிறப்பான வகையில் காண கிடைத்தமை அதாவது நாடகம் என்பது ஓர் கூட்டுக்கலை. அதனுள் ஒலி, ஒளி எனப் பல விடயங்கள் தங்கியுள்ளன. இங்கு இவை யாவும் மற்றுமோர் சிறப்பான அம்சமாகும். குறிப்பாகக் கூறுவதாயின் போர்த்துக்கேயர் தமக்கேயுரிய உடையுடன் தமது பாணியில் ஒரு பக்கத்தே வர; மறுபுறத்தே சங்கிலிமன்னன் தமது படைகளுடன் தமது பாணியில் மந்திராலோசனை நடத்தி கோப்பாய்க்கு பின்வாங்குவதும் இவற்றை மேற்கத்திய கருவி உடுக்கு மூலம்- இசை மூலம் வேறுபடுத்தி காட்டியிருந்தமையைக் குறிப்பிடலாம். இற்றைக்கு 400 ஆண்டுகட்கு முன்பு நடைபெற்ற கதையாக இருப்பினும் சம்பவம் இடம்பெற்ற ஆண்டுகள் அரங்குக்கு வெளிப்புறத்தே பார்வையாளர்களுக்கென தொங்கவிடப்பட்டு மாற்றம் செய்யப்பட்டிருப்பினும், அந்நியப்படைகள் எனத் தெரிந்தும் உளவு வேலை புரிந்து சுயலாபம் தேடும் பாத்திரமாகட்டும், ஊேற்று நாட்டு படைகள் போரிட வரும் வேளை சிங்கள- தமிழ் படைகள் ஒன்று சேர்ந்தாலும் சங்கிலி மன்னனுடன் இருந்து பின்பு அடிக்கடி மாறும் அதே பாத்திரமாகட்டும். சங்கிலிய மன்னனும் சிங்கள படைத் தளபதியும் எதையோ கதைக்க பட்டத்து இளவரசிக்கு மொழி புரியாததினால் தான் எண்ணியதனையே போட்டுடைக்கும் பாத்திரமாகட்டும். இவை முறையே சமகாலத்தில் தமிழ் கட்சித் தலைவர்களினையும், கட்சிகளது நிலையையும் இன்று அனேகமான இடங்களில் காணப்படும் மொழிபெயர்ப்பாளர்களினையும், நினைவூட்டப்படுவனவாக சித்தரிப்பனவாக அமைந்துவிடுகின்றன. இவை மட்டுமன்றி போர்த்துக்கேயரது வருகையை எதிர்த்து போராடுவதற்குத் தயராகும் படைத் தளபதியை தடுத்து நிறுத்தும் மன்னன் ''இது உசந்த நேரமன்று'' அரண்மனையைக் கொளுத்தி விட்டு அனைவரையும் கோப்பாய்க்குப் பின்வாங்கச் செய்'' என்பதிலாகட்டும். சிங்களப் படைகளினது தளபதி தற்செயல் மரணம் எய்துவதும் இடம்பெயர்வு,போர் அன்னியர் வருகைகளில் மக்கள் படும் அவலங்களினை எடுத்தியம்புவதிலாகட்டும். யுத்த தந்திரோபாயங்களினை சமகாலங்களில் நிகழ்ந்த நிகழ்கின்றநிகழ்வுகட்கான காரண காரிய விளக்கங்களாகக் குறியீடு வடிவிலும் அமைந்துவிடுகின்றன. இந்த வகையில் மட்டுமன்றி பல்வகையிலும் மேற்படி நாடகமானது உள்பொருளாக ஒன்றையும் மறை பொருளாக பிறிதொன்றையும் ஏககாலத்தில் அனைவருக்கும் ஏற்புடைய விதத்தில் எழுத்துருவாக்கம் அமைந்தமை மற்றுமொரு சிறப்பம்சம்.

**ஜெ. தரன்**

### அரங்கை மிளிரவைத்தவை

நாடகத்தினைப் பொறுத்தவரையில் எழுத்துரு, வேட உடை, ஒப்பனை, இசை, காட்சிவிதானிப்பு போன்ற பல்வேறு மூலக் கூறுகள் சிறப்பாக அமைந்திருத்தல் அவசியம்என்பது நாம் ஏலவே அறிந்ததே. இங்கும் அதனைக் காண முடிந்தது. அரசனது காலணி. (முன்பககம் வளைந்த) மன்னன் அரசியின்உடுபுடைவை, பறங்கியரது சுங்கான், மொழிநடை, சப்பாத்து, புலிததோல், வயதுவந்தோர் பபன்படுத்தும் பாக்கு இடிக்கும் உரல், திண்ணைப்பளளி நாடிபார்க்கும் வைத்திய மூைற, பூரசு கொட்டல், திண்ணைக்கூடம், போர்க் கருவிகள் என யாவுமே நன்கு திட்டமிடப்பட்டு அரங்கை மிளிரச் செய்ததுடன், நாடகம் நடைபெற்ற காலத்திக்கே பார்வையாளர்களை அழைத்துச் சென்று விட்டது. இவை மட்டுமன்றி ''பாக்குரலின் சத்தம் கேட்குதணை சூட்சுமங்கள் நடப்பதனைக் காட்டுதணை'' என்கின்ற பாடலும் சுன்னாகச் சந்தையில் பறங்கிசுங்கானைத்தொலைத்தானடி என்பதான பின்னணிப்பாடலும் சூழ்நிலைகளினை நன்கு சித்தரிப்பதாக மட்டுமன்றி, நாடகத்தை யதார்த்தமாக நடத்திச் செல்ல உதவி விடுகின்றன. குறிப்பாக ஏடுகள் (தமிழர் வரலாறுகள் பல) இன்மைக்கானமுக்கியகாரணமான போர்த்துக்கீசர் செய்வினை, சூனியம் செய்யும் பொருளாக ஏட்டைக் கருதியதனாலும், மன்னர்கள் தமது அரிய பொக்கிஷங்கள் மறைத்து வைக்கும் இடங்களைக் குறித்து வைக்கும் பொருளாக ஏட்டைக் கருதியதனாலும், இவை காரணமாக இவற்றைக் கண்டவுடன் எரித்து விட்டதனாலுமே, என்பதனையும், இறுதிக்காலத்தில் மனநோயாளிகளைக் குணப்படுத்த, கட்டுப்படுத்த பின்பற்றிய வழிமுறைமைகளினையும் என அறிவுக்கு விருந்தாகவும் மேற்படி நாடகம் அமைந்து காணப்பட்டது.

### சிறப்புச்சேர்க்கும்ஊடகங்கள்

ஆட்சிக்காலம் மாற்றமடைந்து ஆட்சிமுறைமையில் மாற்றமடையும் போது அரசில் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை போன்றனவற்றைச் சிருஷ்டிக்கு முகமாக அரங்கின் ஓரத்தே முனகிக் கொண்டிருக்கும் மனநோயாளி பறங்கியரது வருகையால் விடுவிக்கப்படுவதும். பெண்கள் அஞ்சி ஓடும் போதும் பின்பு பறங்கியரிடமிருந்து நாட்டைக் கைப்பற்றும் சங்கிலியமன்னன் மனநோயாளியை பிடித்து நல்லவரை விடுவிப்பதும் மகளிற் கூடி நின்று வனப்பை ரசிப்பதும் நாட்டின் நீதி நிர்வாகம் தளைத்தோங்கும் முறைமைகளினை சுட்டிக் காட்டும் சுட்டுப் பொருளாக ஊடகங்களாக அமைந்து மேலும் சிறப்பு சேர்ப்பனவாக அமைந்து விடுகின்றன.

### தமிழர் பெருமை

பறங்கியர் நாட்டுக்கு படையெடுக்க போகின்றனர் என்பதை உணரும் அரசியார் துர்க்குணங்கள் தென்படுவதனை எதிர்கொள்வதும் இருக்கையாக உரல் பயன்படுவதும் ''அந்தப்புரத்திற்கு சென்று பறவைகளுடன் கூத்தாடும் நேரம் இதுவல்ல'' என்பதான வசனங்கள் பேசப்படுவதும்'' (யாழ்ப்பாணத்து மகளிருக்கு கண்கள் ரொம்ப அழகு'' என வழிவதிலும்) இறந்துவிட்ட சிங்கள மன்னனுக்கென அதேயிடத்தில் கோயில் கட்டுவதிலும் தமிழர்களது பெருமைகள் பறைசாற்றும் ஊடகமாக மட்டுமன்றி சமகாலத்தில் எமது நிலை பங்கு எனபனவற்றினையும் சற்றேனும் சிந்திக்க வைக்கின்றது கூடவே தமிழர்களது பாரம்பரியங்களில் ஒன்றான வம்பழத்தலும் சில பாத்திரங்களூடாக காட்டப்படுகின்றன எனினும் நகைச்சுவைக்காக இவை பேசப்படினும் சில வேளைகளில் அதிகப்பிரசங்கித்தனமோ? என எண்ணவும் தோன்றுகின்றது. அத்துடன் ஒலியமைவும் பல இடங்களில பலரையும் திருப்திகொள்வதாக அமையவில்லை.

மற்றபடி மேற்படி நாடகம் நாடகம் சார்புடையவர்கள் மட்டுமன்றி வரலாறு தெரிந்திருக்க விரும்பும் ஒவ்வொரு மனிதனுக்கும் சென்றடையத் தக்க வகையில் நூலுருவாகவோ ஊடகங்கள் வாயிலாகவோ இயலுமாயின் நாடகமாகவோ உருப்பெற வேண்டும் அத்தகையதோர் சிறப்பான ஆற்றுகையாக மேற்படி நாடகம் அமைந்திருக்கின்றமை இன்றைய காலத்தின தேவை மட்டுமன்றி அனேகமானவர்களது உணர்வுகளது வெளிப்பாடும் கூட என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

★ குறிப்பு:

நூல் விமர்சனம் வெளியிட வேண்டுமாயின் விமர்சனத்துடன் சம்பந்தப்பட்ட நூலின பிரதியையும் அனுப்பி வைக்க வேண்டும். தாளின ஒரு பக்கத்தில் மட்டுமே எழுதி இரண்டரைப் பககங்களுக்கு மேற்படாமல் விமர்சனம் அமைவது வரவேற்தக்கது. (ஆ-ர்)

---

★ நீர்வேலி கந்தசாமிகோயில் உற்சவ காலக்கவிதை

## அகதி என்னும்நிலை மாற வேண்டும்

கொடியேறி விழாக் காணும் நீர்வைக் கந்தா
கோல மயில் மீது நீ வீதி வரவேண்டும்
கொடிய போர் ஓய அருள் புரிய வேண்டும்
அடியார்கள் இதயத்தில் குடியிருக்கும் குமரா
அகதியென்ற இழி நிலை நீங்கவேண்டும்
தெடிதாள் வயல் சூழ் நீர்வைவாசா
அடியேனுக் இவ்வரங்கள் அருளவேண்டும்
அன்புடனே நின்பாதமலர் பற்றுகின்றேன்

'நீர்வை-இரதி'

---

வலிகாம வலயம்

## பாடசாலைகள் மட்டத்தில் மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளுக்கான வலயமட்ட மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 25, 26, 27, 30 ஆம் திகதிகளில் யா/ யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பழைக் கோட்டங்களுக் குட்பட்ட பாடசாலைகள் பங்குபற்றும் மேற்படி போட்டிகள் 25 ஆம் திகதி காலை 8.30 மணி தொடக்கம் 12.30 மணி வரையும் 26, 27, 30 ஆம் திகதி பி.ப 1 மணி தொடக்கம் 5 மணிவரையும் நடைபெறவுள்ளன;

இப் போட்டிகள் சம்பந்தமான அறிவுறுத்தல் கடிதங்கள் வலயக கல்விப் பணிப்பாளர் வீ. இராஜசயாவினால் பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. (உ-2)

## வயோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

கிணற்றிலதண்ணீர் அள்ளிய சமயம் தவறி விழுந்த வயோதிபர் ஒருவர் பரிதாபகரமாக மரணம அடைந்துள்ளார்.

மயிலிட்டியில் இருந்து இடம் பெயர்ந்து மானிப்பாய் பகுதியில் வசித்து வந்த வையாபுரி (வயது 90 என்றவரே இவ்விதம் மரண மடைந்தவர் ஆவார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. (க-10)

அற்புதமான
வடிவமைப்புக்களைக்
கொண்ட
அழகிய தங்க நகைகளுக்கு
நங்கையர் நாடும் இடம்
நியூ
ராதிகாஸ்
நகை மாளிகை
189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்
(கி/ 1770)

ஐக்கியதேசியக்கட்சியின்

# ஆணைகுழு அமைக்கும் முயற்சியால்

# தமிழ்க்கட்சிகள் அதிருப்தி, விசனம்

இனப் பிரச்சினைக்கான சமாதானத்தீர்வுக்கு ஒத்துழைப்புவழங்க ஐ.தே.கட்சி நிபந்தனை விதித்திருப்பது குறித்து தமிழ்க்கட்சிகள் தமது அதிருப்தியையும் விசனத்தையும்தெரிவித்துள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நோர்வேசென்ற ரணில்விக்கிரமசிங்கா சுதந்திரநீதிச்சேவை, பொதுச்சேவை பொலிஸ்சேவை தேர்தல்என நான்கு ஆணைக்குழுக்களை அமைப்பதற்கு அரசு ஆதரவுதர வேண்டுமென நோர்வே அதிகாரிகளூடாக அரசுக்கு நிபந்தனை விதித்துள்ளார்.

இதுகுறித்து கூட்டணி எம்.பி.மாவைசேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில் ஐக்கியதேசியகட்சியின்சுய அரசியல்லாபத்தையே இது காட்டுவதாகக்கூறி யுள்ளார்.

ரெலோமுதல்வர் சிறிகாந்தா கருத்துக் கூறுகையில் ஐ.தே.கட்சிநிபந்தனை குறித்து அனாவசியமான பிரச்சனையை கிளப்பியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (ந)

தங்க நகை உலகில்
மங்காப் புகழ் பெற்ற
தங்க ஆபரணங்களின்
சாம்ராஜ்யம்
மகாநதி
ஜுவல்லறி
72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.
(கி/1769)

## எரிக்சோல்

24ம் திகதி நள்ளிரவுடன் முடிவடையவிருக்கும் யுத்த நிறுத்தம் தொடர்பாக அன்ரன்பாலசிங்கம் எரிக்சோல் ஹெய்ம்மிடம் தெரிவிக்கையில் அடுத்த யுத்தநிறுத்த நீடிப்பு தொடர்பாக தற்போது எதுவும் கூறமுடியாதென்றும் அதனை விடுதலைப்புலிகளின் தலைமைப் பீடமே அறிவிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தைநீடிக்க வேண்டும் என்றுஅன்ரன் பாலசிங்கத்திடம் தூதுவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (வ)

## புலிகளுக்கு...

அனுபவத்தில் இருந்து நல்ல பாடத்தைக் கற்றுக்கொண்டதால் மேலும் ஒரு யுத்த நிறுத்த நீடிப்பை அறிவிக்கும் என எதிர்பார்க்க முடியாது.

தற்போது அரசு மேற்கொண்டு வரும் யுத்த நடவடிக்கையானது பயங்கரவாதிகளுக்கு எதிரானது இதனை மக்களின் போராகவே கருதல் வேண்டும்.

இந்நிலையில்மக்கள் அர்ப்பணிப்புசிந்தனையுடன் செயற்படுவதோடு இதனால் ஏற்படும் அசௌகரியங்களுக்கும் மக்கள் தம்மைத்தயார்படுத்திக் கொள்வது அவசியமாகும்.

எமது நாட்டின் உள்விவகாரத்தில் வெளிநாட்டைச் சேர்ந்தவர்களுக்கோ தனிநபருக்கோ அல்லது ஒருஅமைப்புக்கோ தலையிடும் அனுமதி வழங்கமாட்டாது என்றும் தெரிவித்த பிரதமர்;

அரசாங்கத்தின் அனுமதி இன்றி தடைசெய்யப்பட்டுள்ள வன்னிப் பிரதேசத்திற்கு சென்று அரசை எதிர்க்கும்சக்திகளுடன் பேச்சு நடத்துவதுதான் சுதந்திர ஊடகமா? என்றும் கேள்வி எழுப்பி உள்ளார். [வ-4]

## முல்லைத்தீவு...

கள் நிர்மூலமாக்கப் பட்டதாக அரசு அறிவித்துள்ளது. காயமடைந்த 4படையினரும் திருமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இம்மோதலின்போது கடற்படைக்கு உதவியாக திருமலையில் இருந்தும் காங்கேசன் துறையிலஇருந்தும் மேலதிகபடையினர் அனுப்பிவைக்கப்பட்டனர்

இம்மோதல் சம்பவத்தை அடுத்துகரையோரக்குடியிருப்புக்கள் மீது கண் மூடித் தனமாக குண்டுத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டது. (ம)

## மட்டக்களப்பு

மட்டக்களப்பு நகர் அதிர்ந்த வண்ணமிருந்தது.

புலிகள் யுத்தநிறுத்தம்அறிவித்த நான்கு மாதகாலத்தில் இடம் பெற்ற முதலாவது ஷெல்தாக்குதல் இது வென்பதும் குறிப்பிடத்தக்கது. (ந)

## ஐ-தே-க

மாதத்தில் நிச்சயம் அவற்றை பாராளுமன்றில் சமர்ப்பிப்போமென்று ஐக்கியதேசியக் கட்சியின் பிரதித்தலைவர் கருஜெயசூரியா தெரிவித்துள்ளார்.

இந் நான்கு ஆணைக்குழுக்களுக்கான சட்டமூலம்சமர்ப்பிக்கப்படுவதைதடுப்பதற்காக அரசு பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஒரு மாதத்திற்கு ஒத்தி வைக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (ந)

## சமாதானம்

நாளாக இன்று காலை யாழ் பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்யவுள்ளனர்.

இன்று காலை 9.30 மணிக்கு யாழ் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தினையும், பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகளையும், நிர்வாக உத்தியோகத்தர்களையும், தொழில்நுட்ப உத்தியோகத்தர்களையும், பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினரையும் சந்திக்கவுள்ளனர்.

இதனை அடுத்து சாட்டி வேலணைப்பகுதிக்கும் செல்லும் இவர்கள் இன்று மாலை கொழும்பு திரும்புவர். [வ]

## நட்டஈடு

நட்டஈடும் இல்லையென அரசாங்கம் சுற்றுநிருபம் ஒன்றை அனுப்பிவைத்துள்ளது.

இந்த சுற்றுநிருபத்தை அடுத்து வலிவடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் அடங்கும் காணிச் சொந்தக்காரர்களுக்கு நட்டஈட்டு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. [வ]

பலலட்சம் ரூபா

# கொள்ளை சம்பவத்தில் ஈடுபட்ட மூவர் கைது

(கொழும்பு)

பல்வேறு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு சுமார் 79லட்சம்ரூபாபெறுமதியான சொத்துக்களை திருடிய குற்றச் சாட்டின் பேரில் மூவர் கொழும்பு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் இருவர் விமானப் படையில் இருந்து தப்பி ஓடியவர்கள் என்றும், மற்றையவர் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவின் ரிசேவ் கான்ஸ்டபிள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை இந்தச்சந்தேக நபர்கள் மீது பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டபோது ஹற்றன் நஷனல் வங்கியின் மருதகமூல கிளை, சம்பத்வங்கியின் நீர்கொழும்புக்கிளை ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்ட கொள்ளைச் சம்பவங்களுடன் இவர்கள் தொடர்புபட்டவர்களெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

## சேவைக் கால செயலமர்வு

(மந்திகை)

தென்மராட்சிப் வலயபாடசாலைகளில் தரம்12,13களில் நடனம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலசெயலமர்வு எதிர்வரும் 21ம் திகதி சனிக்கிழமை காலை 8 00 மணிக்கு இணுவில்மத்தியகல்லூரியில் நடைபெற வுள்ளதாக வலயக்கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

இதேவேளை புவியியல், வரலாறுகற்பிக்கும்ஆசிரியர்களுக்கான சேவைக் கால செயலமர்வு இன்று நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும்நடைபெறவுள்ளதாகவும் வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (உ-23)

## அ. இ. த. காவின் விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸின் விசேட பொதுக் கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 9மணிக்கு கொக்குவில்கிழக்கு கருவேலடி ஒழுங்கையில் உள்ள கட்சிப் பணிமனையில் நடைபெறும். (ந-5)

## விடுகைப் பத்திரம் அவசியம்

(யாழ்ப்பாணம்)

அபிவிருத்தித் தொண்டர் தெரிவுக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுவோர் தவறாது தமது பாடசாலை விடுகைப் பத்திரத்தை கொண்டு செல்லுமாறு ஈ.பி.டி.பியின் பிரதி அமைப்பாளர் க. மணிபல்லவராஜன் கேட்டுள்ளார். (ந)

கைலாசபதி அரங்கில்

## இன்று நாடக ஆற்றுகை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கலைக்கழகத்தின் நாடகமும் அரங்கியலும்மாணவர்களால் வழங்கப்படும் 'தண்ணென்ற இன்பத்திலே' நாடக ஆற்றுகை இன்று முற்பகல் 10.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

## இளைஞனைக் காணோம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் சதா பேக்கரி ஊழியரான கல்வியங்காட்டைச் சேர்ந்த ந.வாகீஸ்வரன் (வயது20)என்பவரைக்கடந்த 16 ஆம் திகதி முதல் காணவில்லையென உறவினர்களால் யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. [உ-10]

காயமடைந்தவர்

## தற்கொலை

மாத்தளைஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளிஒருவர் கழிவறைஒன்றுள் கழுத்தில் சுருக்கிட்டு தற்கொலைசெய்துள்ளார்.

ரத்தோட்டையைச்சேர்ந்த இவர் கடந்த18ந்திகதிஇடம் பெற்றசம்பவம் ஒன்றில் காயமடைந்துவைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்தார்.

தனதுஆடைகளை கிழித்து கழுத்தில்சுருக்கிட்டு தற்கொலை செய்துள்ளதாகவும் இதுதொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக பொலிசார் தெரிவித்துள்ளார். [ந-5]

## ச.செ.சங்கத்தால் செய்திபரிமாற்றம்

நாட்டில் தபால் தந்திச் சேவைகள்ஸ்தம்பிதம்அடைந்துள்ள பகுதிகளில் உள்ளமக்களுக்கு அவசரசெய்திகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளவெனசர்வதேச செஞ்சிலுவைக் குழுவினால் புதியதகவல் பரிமாற்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இப்புதிய சேவைமூலம் மரணச்செய்திகள்; சுகயீனம் பாடசாலைமற்றும்.பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி பற்றியசெய்திகள் மற்றும் நேர்முகப்பரீட்சைகள்பற்றிய செய்திகளை பரிமாற்றம் செய்யமுடியுமென சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பேச்சாளர் ஹரிகுணவர்த்தன தெரிவித்துள்ளார். [ந]

## தெல்லிப்பழை முகாமில் 40இளைஞர்கள்

தெல்லிப்பழையில் உள்ள புனர்வாழ்வு முகாமில் தற்போது 40 தமிழ் இளைஞர்கள் தங்கவைக்கப்பட்டுள்ளனர்;

இவர்களில் 12இளைஞர்கள் பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில் இருந்து அண்மையில் மாற்றப்பட்டவர்களவர்

இம்முகமில் உள்ள இளைஞர்கள் பெரும்பாலும் மட்டக்களப்பு' அம்பாறை மயிலிட்டி போன்ற இடங்களைச் சேர்ந்தவர்களாவர்..

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

நீர்கொழும்பு சிறைச்சாலைகளில் கைதிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தஉண்ணாவிரதம் நேற்றுடன் கைவிடப்பட்டுள்ளது.

தமிழர்விடுதலைக்கூட்டணியைச் சேர்ந்த என் ரவிராஜ் அரவிந்தன் ஆகியோரின் வேண்டு கோளை அடுத்தே இந்த உண்ணவிரதம் கைவிடப்பட்டுள்ளது.

சட்டமா அதிபர் திணைக்களம் உரியநடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது (வ)

## பவளவிழா

மூளாய் ஐக்கிய பரஸ்பர சகாயச் சங்கத்தின் பவள விழா, நாளை ஞாயிற்றுக்கிழமை, மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் தலைவர் உதயசூரியன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

அன்றைய தினம், பவள விழாவையொட்டி பொது அறிவுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன;

எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில் - - - - -
நியூ நகுலா ஜுவல்லறி
74, கஸ்தூரியார் வீதி, - - - - - யாழ்ப்பாணம்.
நியூ லலிதாஸ் ஜுவல்லறி
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [கி-1851]
நகுலா நகைமாடம்
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு ஏப்ரல் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது